# முல்லைப் பாட்டு

ஆராய்ச்சி உரை

தமிழ்ப் பேராசிரியர் :
கா. ர. கோவிந்தராஜ முதலியார்

# முல்லைப் பாட்டு

## ஆராய்ச்சி உரை

ஆசிரியர் :

*சென்னைப் பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளி*
*முன்னைத் தலைமைத் தமிழாசிரியர்*
**கா. ர. கோவிந்தராஜ முதலியார்**

பதிப்பாளர் :

N. R. சடகோப முதலியார்,

வேளாளர் தெரு, :: புரசை, சென்னை-7

**1952**

பதிப்புரிமை] [விலை அணா 12

ஶ்ரீ:

# முகவுரை

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்."

ஓராண்டுக்கு முன் ஒரு நாள் என்னுடைய மாணாக்கர்களுள் ஒருவரும் எனக்குப் பல உதவிகளைச் செய்து வருபவரும் ஆகிய திரு. சடகோப முதலியார் அவர்கள் வீட்டுக்கு நான் போயிருந்தபோது அவர், பத்துப்பாட்டில் ஒன்றாகிய முல்லைப் பாட்டைப் படிக்க வேண்டும என்றார். நான், அன்று அப்பாட்டின் சில அடிகளுக்குப் பொருள் கூறிவிட்டு, 'மற்ற அடிகளின் பொருளை அடிக்கடி இங்கு வந்து கூறுகின்றேன்,' என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன்; அவர் வீட்டுக்கு என் வீடு மிக்க தூரத்தில் இருந்ததால், "அவர் வீட்டுக்கு அடிக்கடி சென்று, அவற்றிற்குப் பொருள் கூறி வருவதினும் பதவுரையும் பொழிப்புரையும் எழுதிக் கொடுத்துவிடுவது நலம் ஆம்," என்று கருதி, அவ்வாறே உரை எழுதி வரலானேன். அங்ஙனம் எழுதி வருகையில் சில விசேடக் கருத்துக்கள் தோன்றின. ஆதலின், "முல்லைப்பாட்டுக்குப் பதவுரை, பொழிப்புரை, விசேடவுரைகளை எழுதுதல் வேண்டும்," என்னும் கருத்து எனக்கு உண்டாயிற்று. அதனால், அவ்வாறே உரை எழுதத் தொடங்கி; அப்பாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, அங்ஙனமே உரை எழுதி வரலானேன். அங்ஙனம் எழுதி வருகையில் அவ்

வுரையை அடிக்கடி திரு. சடகோப முதலியாருக்குக் காட்டி வரலானேன். அவர், அவ்வுரையில் 'எழிலி, பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை' என்றதன் விசேட வுரையை நோக்கின போது, "மெல்ல நடந்ததே புன்மாலை அந்திப் பொழுது," என்னும் நளவெண்பாவின் அடியை ஞாபகமூட்டினர். பிறகு, "தூங்கல் ஓங்கு நடைப் பெரு மூதாளர்" (அடி. 53, 54) என்பதன்கண் உள்ள 'தூங்கல்' என்பதற்கு 'அனந்தரினையும்' என ஆசிரியர் நச்சினார்க் கினியர் எழுதின உரையை நோக்கி, நான் 'தூக்கமயக்கத் தினையும்' என்று உரை எழுதினேன். திரு. சடகோப முதலியார் அதனை நோக்கி, 'இவ்வுரை தக்கது அன்று,' என்று கூறி, மனோன்மணீயம் என்னும் நூலின்கண் உள்ள "விழிக்கிற் பிழைப்பர் இமைப்பிற் கோடி பிறழுமே" என்பதனை எடுத்துக்காட்டி, "இவ்வுரையை மாற்றி எழுதுதல் வேண்டும்," என்று கூறினர். 'அவர் கூறியது மிகப் பொருத்தமானதே,' என எனக்குத் தோன்றிமையின், அவ்வுரையையும் அதன் விசேட உரையையும் மாற்றி எழுதினேன்.

அங்ஙனம் அப்பாட்டுக்கு உரை எழுதி வருகையில், 'தாயர் இன்றே வருகுவர்' (அடி. 16) என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'நிரம்ப மேய்ந்துவிட்டு நும்முடைய தாயர் இப்பொழுதே வருவர்,' என எழுதிய வுரையை நோக்கி, "இவர் ஈண்டு மூலத்திற் சிறிதும் தொடர்பு இல்லாத 'நிரம்ப மேய்ந்துவிட்டு' என்னும் சொற்களை ஏன் வருவித்துக் கூறினர்?" என்று கருதலானேன். அங்ஙனம் கருதிச் சிந்திக்க, அதற்குக் காரணம் புலப்பட்டது. அதனால், "இப்பாட்டுக்குப் பெரும்பான்மையும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையைப் பின்பற்றியே உரை எழுதுதல் வேண்டும்,"

என்று கருதி, அவ்வாறே பெரும்பான்மையும் அவர் உரையையே பின் பற்றி உரை எழுதினேன்.

இவ்வுரையில் என் சிற்றறிவினால் ஏற்படும் பிழைகளுக்கு அறிஞர்கள் என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

கா. ர. கோவிந்தராஜ முதலியார்

ஸ்ரீ :

## நிலைமண்டில ஆசிரியப்பா

பாருளோர் புகழ்திருப் மணிமலர்ச் சோலையும்
ஏர்வளங் காட்டற் கேற்றநெல் வயல்களும்
அன்னமென் னடையார் ஆடுறு பொய்கையும்
அன்பியல் மாதரின் அவிர்மலர்க் கொடிகளும்
பொருந்துபு விளங்கும் பொற்புறு மாண்பதி
மருவறு பொருளால் மனங்கொண் டோதி
மடவரன் மகளிர் மாணெறி யன்றிப்
பிறநெறி சாராப் பீடுறு பதியாம்
நடுவிற் பேடெனும் நற்பதி யாளன்
அறத்துறை வழாத அருங்குணச் செம்மல்
துலைநா வன்ன நடுநிலைத் தோன்றல்
விளம்புறு புகழ்செறி வேளாண் குலத்தினன்
கராச்சினம் அடக்கிக் களிற்றினைக் காத்தோன்
திருவடி மலர்கள் திகழ்மனப் பொய்கையன்
இராசெனும் பெயரேய் இன்குணச் செல்வனும்
அன்புடன் அருளும் ஆசறு கற்பும்
நூனய முணரும் நுண்மாண் புலனும்
அமைந்தநல் அன்ன பூரணி அம்மையும்

ஆற்றிய நற்றவத் தணியுரு வனையான்
ஆங்கிலம் கற்றோர் அருந்தமிழ் நூற்களை
உயிரினுஞ் சிறக்க வுவந்தனன் ஓதுவோன்
பொன்னனை இயல்பினன் புன்மொழி ஒழிந்தோன்
எனக்குப் பல்கால் ஏற்றநல் லுதவிகள்
இயற்று கிற்போன் இன்மொழிச் செல்வன்
என்மா ணாக்கன் என்கண் அனையான்
சொல்சட கோபன் எனும்பெயர்ச் செவ்வியன்
தன்பொருட் டாகத் தகுமியல் முல்லையென்
பாட்டிற் குரையைப் பகுத்தீண் டெழுதினன்
சங்கத் தொகைநூல் சாற்றிடின் மூன்றும்:
பத்துப் பாட்டே எட்டுத் தொகையே
பதினெண் கீழ்க்கணக் கென்னப் பகருவர்;
அன்னமாண் தொகைநூல் மூன்றின்முன் அமைந்த
பத்துப் பாட்டின் ஐந்தாம் பாட்டாய்
அமைந்தசீர் முல்லைப் பாட்டெனும் அதற்கே
என்னா லியன்றாங் கோருரை எழுதினன்;
என்மதி யிழுக்கான் மற்றிதின் இசைந்துறும்
குறைகளைக் களைந்து கொள்வன கொள்கென
வேண்டுவன்; பிறிதென் விளம்ப வல்லேன்!
அன்புறு புலவர் அமுதனார் ஆதலின்,
நண்பின ராகி நல்குதல் கடனே.

கா. ர. கோ.

ஸ்ரீ:

# பாட்டின் உள்ளுறை

"புனையும் பொலம்படைப் பொங்குளைமான் தின்டேர்
துனையும் துனைபடைத் துன்னார்—முனையுள்
அடன்முகந்த தானை அவர்வாரா முன்னம்
கடன்முகந்து வந்தன்று கார்."[1]

அகப்பொருளிற் கூறப்படும் தலைவனும் தலைவியும் உரு, திரு, குணங்கள் முதலியவற்றிற் பொருந்தியிருப்பர் என்ப. இந்நூலிற் கூறப்பட்ட தலைவன், வீரர்க்குள் வீரன்; தோலாத வெற்றிவேல் மன்னன். தலைவி, பொற்பின் செல்வி; கற்புக்கரசி. இருவரும் ஒத்த அன்பினர்; அருளின் உறையுள்.

"கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று."[2]

(இ-ள்) 'யான் வளையமாக மாலையைச் சூடினாலும், 'நும்மால் காதலிக்கப்பட்டாள் ஒருத்திக்கு இப்பூவணி காட்ட வேண்டிச் சூடினீர்,' என்று வெகுளுவாள். இத் தன்மையாள் ஊடுதற்கு ஒரு காரணம் வேண்டுமோ?' என்பது.

இது, 'தலைவிக்கு ஊடல் உண்டானதற்குக் காரணம் யாது?' என்று கேட்ட தோழிக்குத் தலைவன் கூறியது. இதனால், தலைவிக்குத் தலைவன்பால் உள்ள அன்பின் தன்மை நன்கு விளங்கும். தலைவனும் தலைவியின்பால் அத்தகைய அன்புடையவனே. இங்ஙனம் அன்புடைய

[1] புறப்பொருள் வெண்பாமாலை, பொதுவியற்படலம்.
[2] திருக்குறள்.

தலைவன் நாடு பெறுதல் காரணமாக வஞ்சி சூடிப் பகைவர்மேற்செல்லக் கருதித் தனக்குள், "நாம் மேற்கொண்ட வினைமேற்செல்லுதற்குத் தலைவி தடையாயிருப்பளோ!" என்று எண்ணினன். அதனால், அவன் மனத்தின்கண் அச்சம் உளதாயிற்று; அவன், அவ்வச்சத்துடன் தலைவிபாற்சென்று, அவளை மிகுதியாகப் பாராட்டினான். அப்பாராட்டு, நாடோறும் பாராட்டும் பாராட்டினும் மிக்கதாயிருத்தலால், தலைவன் தன்னைப் பிரிந்து வினையின்மேற் செல்லக் கருதியுளன் என்பதனைத் தலைவி உணர்ந்துகொண்டனள். அதனால், அவள் முகம் மிக்க வாட்டத்தை எய்தியது. தலைவன், அவள் முகவாட்டத்தைக் கண்டு, தான் வினைமேற் செல்ல வேண்டுவதன் இன்றியமையாமையையும், பகைவர்களுடைய மேன்மையையும் எடுத்துக் கூறினன். அவன் அங்ஙனம் கூறியும், தலைவி, அன்பின் மிகுதியினால், 'இது மன்னற்கு இன்றியமையாததாகும்,' என்று கருதாமல் வருந்த, அவளுடைய பூப்போலும் கண்களினின்றும் முத்தினங்கள் என நீர்த்துளிகள் துளிப்பன ஆயின. தலைவன் அதனைக் கண்டு, "இவளை ஆற்றிக்கொண்டிருத்தற்கு இது தக்க சமயம் அன்று," என்று கருதி, வினைமேற்சென்று விட்டனன். அவளுடைய வாட்டத்தைக் கண்ட பெருமுது பெண்டிர், "மாமை நிறத்தை உடையாய், விரிச்சி கேட்டற்கு உரிய நல்லோர் படைத்தலைவர்களது ஏவலால் நகரத்தின் அண்மையின்கண் உள்ள பாக்கத்தின் பக்கல் சென்று, நாழியிற் கொண்டுபோன நெல்லுடன் முல்லை அரும்புகளைத் தூவித் திருமகள் நாதனைக் கைகூப்பி வணங்கி, விரிச்சி கேட்டற்கு நிற்க, அப்போது குளிரால் நடுங்கும் தோளிற்கட்டின கையை உடையவளாகிய ஆய்மகள், சிறு தாம்பாலே கால் கட்டப் பட்டிருப்பனவும் முலை உண்ணாமையாலே வருத்தத்தைக்

கொண்டனவுமாகிய கன்றுகள், தாய்ப்பசுக்கள் வரும் வழியை நோக்கிப் பலமுறையும் சுழன்றுகொண்டிருத்தலைக் கண்டு, அவற்றை நோக்கி, கொடுங்கோற்கோவலர்கள் பின்னே நின்று செலுத்த, உங்கள் தாய்மார்கள் இப்பொழுதே வருவார்கள்,' என்று கூறினள். நல்லோர் அச்சொற்களைக் கேட்டு வந்து கூறினார்கள். நல்லோர் வாய்ப்புள் நன்மையானவை ஆகும். நம்முடைய தலைவர் வஞ்சி மாலை சூடிச்சென்று, பகைவர்களை வென்று, தாம் கூறியபடி கார்காலத்தில் வருதல் உண்மை. நீ நின் மனத் தடுமாற்றத்தால் உளதாகிய துன்பத்தை விடு,'' என்று கூறினார்கள். அவற்றால் தலைவிக்குத் தெளிவு பிறந்தது.

தலைவன், பகைமேற்சென்ற இடத்துப் பணியாளர்கள், தலைவனும் பெரும்படையும் தங்குதற்குப் பகைவர் நாட்டின் காவலாய் உள்ள காட்டை அழித்துக் கடல் போலப் பரந்த பாசறையை அமைத்தார்கள். அப்பாசறையின் நடுவில் அறைக்குள் அறையாக ஈரறை அமைத்து உள் அறையில் அரசனுக்குப் படுக்கையை அமைத்து வைத்தார்கள்.

போர் தொடங்கியது; பகைவரும் வலியர் ஆதலின், இருபடையிலும் யானைகள், குதிரைகள், தேர்கள் என்னும் இவை பல அழிந்தன. காலாள் வீரர்களும் சில படைத் தலைவர்களும் விண்ணவர்களுடைய விருந்தினர்கள் ஆனார்கள். தலைவன் முனிவுற்றுப் பொருதலின், பகைவர்களுடைய பெரும்படைகள், பெரிதும் தோற்றன. இங்ஙனம் குளிர்காலம் முதல் முதுவேனில் வரையிலும் பத்துத் திங்கள் பெரும்போர் நடந்தது. தலைவன் ஒருநாள் இரவு ஈரறைப் பள்ளியிற் படுத்துக்கொண்டு, போரில் அழிந்த யானைகளையும், குதிரைகளையும், தனக்கு வெற்றியை உண்டாக்கி உயிர் விட்ட படைத் தலைவர்

கலேயும் எண்ணி வருந்திப் பின் செய்தற்குரிய போரை எண்ணித் துயிலாமல் படுக்கையிற் படுத்துக்கொண்டிருந்தான். அங்ஙனம் தலைவன் வருந்திக்கொண்டிருந்த நாள் கார்காலீ முதல் நாள் ஆகும். கார்காலத்தின் முதல் நாள் மாலைப்போதில், மாவலிவார்த்த நீர் தன் கையிற் சென்றதாக உலகை வளைத்து எழுந்து ஓங்கி வளர்ந்த திருமகள் நாதனைப்போல, மேகமானது, கடல் நீரைப் பருகி உலகை வளைத்துக்கொண்டு மலையை இடமாகக்கொண்டு எழுந்து, பெரும்பெயலைச் சொரிந்தது. அங்ஙனம் மேகமானது பெரும்பெயலைச் சொரிந்த மாலைப் போதில் தலைவன் பாசறையிலே படுக்கையிற் படுத்திருந்தலால், தன்பால் தங்கியிருக்கக் காணுமல் தலைவி பெரிதும் வருந்தித் தலைவனும் பெருமுது பெண்டிரும் கூறியவற்றை நன்கு நினைந்து, 'இவ்வாறு பிரிந்தால் அன்றி இவ்வரசியல் நன்கு நடவாது,' என்பதனைக் கருதி ஆற்றியிருந்தனள். தலைவி, அங்ஙனம் ஆற்றியிருந்தாள் ஆயினும், அவள் மனம் நிலை கொள்ளாத துன்பத்தை எய்துவதாயிற்று. தலைவி அங்ஙனம் துன்புறும் மனத்தைத் தேற்றியும், குழலும் வளையைக் கையிற்செறித்தும், மயக்கம் கொண்டும், பெருமூச்சு எறிந்தும், அணிகள் நெகிழப்பெற்றும், அம்பு தைக்கப்பட்ட மயில் போல நடுங்கிப் பொற்பாவை ஏந்திய அகலில் பெரிய விளக்கு நிலை பெற்று எரிய, இடம் சிறந்து உயர்ந்த எழுநிலை மாடத்தின் கண் இருந்து, கூடல்வாய் சொரியும் திரண்ட அருவிகளின் இனியனவான பல்வாகிய ஓசையின்கண், 'தலைவன் தான் கூறிய பருவம் ஆதலின், தான் கூறியபடி பொய்யாமல் வருவன்,' என்னும் கருத்தைக் கொண்டவளாய், அவனையே கருதிக்கிடந்தாள். கணிதர் அரசனை வணங்கி விளங்க வாழ்த்திக் "கடலாற் சூழப்பட்ட உலகத்தில் பகைவரை வெல்லுதற்குச் செல்கின்ற மன்னரே, உம்

முடைய கடாரத்து நீரிலே காணப்படும் நாழிகை இத்துணையாம்,' என்று கூற, எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, கடவுளை வணங்கி, வஞ்சி மாலை மிலைந்து சென்று, பகைவர்களை முற்றும் வென்றனன் ஆக, அவ்வெற்றியை அறிந்தமையின் படைகள் ஒன்றாய்த் திரண்டன. கொம்புகளும் சங்குகளும் ஆர்த்தன. வெற்றிக்கொடி உயர்த்தப்பட்டது. தலைவன் தலைவியைக் காண அப்படைகளின் பெருந்திரளோடு திரும்பினன். நுண்மணலிடத்தனவாகிய காயா, மையைப் போல மலர்ந்தன. தளிரையும் கொத்தினையும் உடைய கொன்றை மரங்கள், சிறந்த பொன் போன்ற மலர்களைச் சொரிந்தன. வெண்காந்தளின் அரும்புகள், அகங்கைகள் போல இதழ்கள் அவிழப்பெற்றன. திரட்சி நிறைந்தனவாகிய செங்காந்தள்கள், உதிரம் போலப் பூத்தன. இங்ஙனம் காடு தழைத்த சிவந்த நிலத்தின் பெருவழியில் மழைவேண்டிய அளவு பெய்யப் பெற்றனவும், வெள்ளிய மழை சிறு துவலையைப் பொழியும் முன்பனி தொடங்கும் திங்களிலே வளைகின்ற கதிர்களை உடையனவும் ஆகிய வரகுகளின்கண், முறுக்குண்ட கொம்புகளை உடைய புல்வாய்க்கலைகளுடன் மடமான்கள் துள்ளலாயின. இங்ஙனம் செழித்துள்ளதும், தன் பருவம் முதிரும் காயை உடையதும் ஆகிய வள்ளிக்காடு பின் ஆகத் தலைவன் தான் எடுத்துக்கொண்ட வினை எக்காலமும் விளங்குதற்குக் காரணம் ஆனவையும், தாமே இயல்பில் விரைந்து செல்வனவாயிருந்தும் தலைவியை விரைந்து காண வேண்டும் என்னும் வேட்கை கொண்ட தலைவனால் மேலும் விரைவாகச் செலுத்தப்படுவனவும் ஆகிய குதிரைகள், அங்ஙனம் தலைவனையே கருதிக்கிடந்த தலைவியினுடைய காதுகள் நிறையும்படி ஆரவாரித்தன. (தலைவி அவ்வார்ப்புத் தலைவன் இவர்ந்து வந்த தேரிலே பூண்ட குதிரைகளின் ஆர்ப்பு என்றறிந்து மகிழ்வெய்தினள்.)

ஸ்ரீ:

# பொருள் வகை

°நேரிசை வெண்பா

"காய்தல் உவத்தல் அகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே;-காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும்; உவப்புதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்."[1]

மக்கள் உலகில் எய்துதற்கு உரிய பொருள் நான்கு. அவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இந்நான்கும் தமிழில் அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாக வகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இந்நாற்பொருள்களுள், இன்பம் அகப்பொருள் எனவும், அறமும் பொருளும் புறப்பொருள் எனவும் கொண்டு கூறப்படுவனவாயின. சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆதலின், வீடும் புறப் பொருளாகவே கொள்ளப்பட்டுள்ளது.

ஆசிரியர் தொல்காப்பியனார், அகப்பொருளை எழு பிரிவாகவும், புறப்பொருளை எழு பிரிவாகவும் வகுத்துரைத்தனர்.

அவற்றுள், அகப்பொருளின் எழு பிரிவாவன: கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன. என்னை?

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப."[2]

என்பது.

---

1. அறநெறிச்சாரம் [2] தொல். பொருள். அகம். சூ. 1

அவற்றுள், 'கைக்கிளை' என்பது, ஒருதலைக்காமம்; 'ஐந்திணை' என்பது ஒத்த காமம்; 'பெருந்திணை' என்பது பொருந்தாக்காமம்.

அவற்றுள், ஐந்திணைகளாவன: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன.

அவற்றுள், ஒவ்வொன்றும், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மும்மூன்று கூற்றினுற் கூறப்படும். அவை அங்ஙனம் கூறப்படுதலை,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலும் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடும் காலை."[1]

என்றதனுல் அறிக.

அவற்றுள், முதற்பொருள் நிலமும் பொழுதும் என இருவகைப்படும். என்னை?

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே."[2]

என்றுராதலின்.

அவற்றுள், நிலம் ஐந்து வகைப்படும். அவை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன.

அவற்றுள், குறிஞ்சி, மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். முல்லை, காடும் காடு சார்ந்த இடமும் ஆகும். மருதம், வயலும் வயல் சார்ந்த இடமும் ஆகும். நெய்தல்,

1, 2. தொல். பொருள், அகம், இயல், சூ. 2, 3.

கட்டலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். பாலை, மற்ற வற்றைப் போன்ற தனி நிலம் அன்று; குறிஞ்சி நிலத்தினும் முல்லை நிலத்தினும் சூரியனது வெப்பத்தினால் பசை அற்று, மணல் வெளியாய்த் திரிந்த இடமே, பாலை நிலமாம். அஃது அன்னது ஆதலை,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்."[1]

என்றதனால் அறிக.

பொழுது, பெரும்பொழுது, சிறு பொழுது என இரண்டு வகையாகும். அவற்றுள், பெரும்பொழுது ஆறு. அவை, இளவேனில், முதுவேனில், கார், கூதிர் (குளிர்), முன் பனி, பின் பனி என்பன. இவற்றுக்கு முறையே, சித்திரை முதலாக இவ்விரண்டு மாதங்கள் உரியன ஆகும். இவற்றைப் பருவம் என்றும் கூறுப.

சிறு பொழுது ஆறு. அவை, விடியல் (காலை), நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பன.

நாள் ஒன்றுக்கு நாழிகை அறுபது; ஆதலின், சிறு பொழுது ஒவ்வொன்றுக்கும் பப்பத்து நாழிகை உரியன வாம். சிறு பொழுது ஐந்து என்பாரும் உளர்.

முல்லைக்குக் 'கார்' என்னும் பெரும்பொழுதும், 'மாலை' என்னும் சிறு பொழுதும் உரியனவாகும். குறிஞ்சிக்குக் 'கூதிர் (குளிர்), முன் பனி' என்னும் பெரும் பொழுதுகளும், 'யாமம்' என்னும் சிறுபொழுதும் உரியன வாகும்.

---

1. சிலப்பதிகாரம். 11. காடுகாண் காதை, அடி, 64-66.

பாலைக்கு வேனிற்பருவம் இரண்டும் பின்பனியும் ஆகிய பெரும்பொழுதுகளும், 'நண்பகல்' என்னும் சிறு பொழுதும் உரியனவாகும்.

மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது இல்லை, மருதத்துக்கு வைகறையும் விடியலும் ஆகிய சிறு பொழுதுகள் உரியனவாகும். நெய்தலுக்கு எற்பாடு என்னும் சிறு பொழுது உரியது ஆகும். இவற்றிற்கு அப்பொழுதுகள் உரியவை ஆதலை,

"காரு மாலையு முல்லை, குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்"[1]

"பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப"[2]

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே."[3]

"பின்பனி தானும் உரித்தென மொழிப."[4]

"வைகுறு விடியல் மருதம்; எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்."[5]

என்பவற்றான் அறிக.

கருப்பொருள்கள் ஆவன, அவ்வத்திணைக்கு உரிய நிலத்தின்கண் அமைந்திருக்கும் பொருள்களாம்.

அவை பதினான்கு வகையாம். அவை, தெய்வம், உயர்ந்த மக்கள், தாழ்ந்த மக்கள், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணா, பறவை, யாழ், பண், தொழில் என்பன.

1-5. தொல். பொருள். அகம். சூ. 6, 7, 9, 10, 8.

உரிப்பொருளாவன, அவ்வத்திணைக்கு உரிய ஒழுக்கம் ஆகும். அவை ஐந்து வகையாம். அவை, கூடுதல், இருத்தல், ஊடல், புலம்பல், பிரிவு என்பன. அவ்வவற்றின் நிமித்தங்களும் அவ்வத்திணையாகவே கொள்ளப்படும்.

புறப்பொருளின் ஏழு பிரிவாவன: வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன.

இவை அகத்திணைகளின் புறத்து அவற்றின் இனமாகி இருப்பனவாகும்.

வெட்சித்திணை, குறிஞ்சித்திணைக்குப் புறனும்.
வஞ்சித்திணை, முல்லைத் திணைக்குப் புறனும்.
உழிஞைத்திணை, மருதத்திணைக்குப் புறனும்.
தும்பைத்திணை, நெய்தல் திணைக்குப் புறனும்.
வாகைத்திணை, பாலைத்திணைக்குப் புறனும்.
காஞ்சித்திணை, பெருந்திணைக்குப் புறனும்.
பாடாண் திணை, கைக்கிளைக்குப் புறனும்.

இவை அன்னவாதலை,

"வெட்சி தானே குறிஞ்சியது புறனே"
"வஞ்சி தானே முல்லையது புறனே"
"உழிஞை தானே மருதத்துப் புறனே"
"தும்பை தானே நெய்தலது புறனே"
"வாகை தானே பாலையது புறனே"
"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே"
"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே."

என்னும் தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரங்களான் அறிக.

இனி, நாற்கவிராசநம்பி அகப்பொருளில் அகப் பொருள் ஐந்திணை என்னும் ஐந்து பிரிவை உடையது எனக் கூறப்பட்டுள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலின்கண் புறப்பொருள் பன்னிரண்டு பிரிவை உடையது எனக் கூறப்பட்டுள்ளது. அவை: வெட்சி, கரந்தை. வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பன.

இவற்றுள், கைக்கிளையும் பெருந்திணையும் தொல் காப்பியத்துள், அகப்பொருளிற்சேர்த்துக் கூறப்பட் டுள்ளன. பொதுவியல் என்பதொரு திணை கொள்ளப் படவில்லை. அன்றியும், தொல்காப்பியத்தின்கண், கரந்தை வெட்சித்திணையுள்ளும், நொச்சி உழிஞைத்திணை யுள்ளும் அடக்கிக் கூறப்பட்டுள்ளன. இவ்வைந்தையும் நீக்க எஞ்சியிருப்பன ஏழே ஆகும்.

ஆசிரியர் நப்பூதனார் காலத்து இலக்கணம் தொல் காப்பியம் ஆம் என்பதையும், நாற்கவிராச நம்பி அகப் பொருள்,புறப்பொருள் வெண்பாமாலை என்பன பிற்காலத் தன என்பதையும் ஈண்டு நோக்குதல் வேண்டும்.

'முல்லைப்பாட்டு' என்பது 'பத்துப்பாட்டு' என்னும் தொகைநூலில் உள்ள பாட்டுக்கள் பத்தனுள்,ஐந்தாவது ஆகும். இது, 103 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவாலானது.

இந்நூலிற் கூறப்பட்ட பொருள் முல்லைத்திணையின் உரிப்பொருள் ஆகிய 'இருத்தல்' என்னும் பொருளாம். இருத்தலாவது, தலைவி, தலைவன் பிரிந்து செல்ல அவன் வருந்துணையும் அவன் பிரிவால் ஆகிய துன்பத்தை ஆற்றியிருத்தல் ஆகும்.

இந்நூல் ஆசிரியர், தாம் கூறப்புக்கது, முல்லைத் திணைப்பொருள் ஆகிய இருத்தல் ஆம் என்பதனை, நாடக ஆசிரியர்கள் நாடகத்தின் முதலில் தாங்கள் மேற்கொண்ட நாடகத்தின் கதையைத் தோற்றுவாய் செய்தல் போல,

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

எனத் தோற்றுவாய் செய்தனர். அதனை அடுத்து, 7-ஆம் அடி முதல் 21-ஆம் அடி வரையில் அதனை வற்புறுத்தற்கு உரியதாகிய விரிச்சியைக் கூறினர். இது, தலைவன் தலைவிக்குத் தான் வினைமேற் செல்ல வேண்டியதன் காரணம் கூறுதலை உணர்த்துவதாகிய 'காட்டவும் காட்டவும்' என்பதற்குப்பின் இருத்தல் வேண்டும் ஆயினும், தாம் தோற்றுவாய் செய்த பொருள் இருத்தலே ஆகும் என்பதனை வற்புறுத்தற்கு அதனை அடுத்து இதனைக் கூறினர். பிறகு முல்லைத்திணையின் புறனாகிய வஞ்சித் திணையைத் தோற்றுவித்தற்குக் "காணுள் கலுழ்சிறந்து, பூப்போல் உண்கண் புலம்புமுத் துறைப்ப" என்பதனைக் கூறினர். என் எனின், இதனை அடுத்துத் தலைவனைப் பாசறையிற் காட்டுதலின், தலைவன், 'தலைவியை ஆற்றிக்கொண்டிருத்தல் இனி இயலாது.' என்று கருதி வினைமேற் சென்றுவிட்டனன். அது தெரிவித்தலின் என்க. அதனை அடுத்து 24-ஆம் அடி முதல் 66-ஆம் அடி வரையிலும் பகைவர்கள் மேற் சென்ற தலைவனுக்கு அமைக்கப்பட்ட பாசறையைப்

பற்றிக் கூறினர். அதனை அடுத்துப் பெரும் பெயல் பொழிந்த அம்மாலைப்போதிலும் தலைவன் தலைவியின்பால் மனத்தைச் செலுத்தாமல் தான் மேற் கொண்ட வினையின்மீது தானே தன் மனத்தைச் செலுத்தி யிருந்த அவனது மன நிலையை 67-ஆம் அடிமுதல் 80-ஆம் அடிவரையிற் கூறினர். அன்றியும், அவற்றுள் தலைவன் வினைமேற்சென்று போர் புரிந்திருத்தலையும், அப்போரின் திறத்தையும், பெரிதும் வெற்றி உண்டாயிற்று என்பதை யும், மற்றும் சிறிது போர் புரிய வேண்டியிருத்தலையும், பகைவரும் வலியர் என்பதையும் விளக்கினர். அதனை அடுத்து, அவ்வடியின்கண் உள்ள ''காணாள் துயர் உழந்து'' என்பது முதல் 88-ஆம் அடிவரையிலும் தலைவி தலைவன் பிரிவால் ஆகிய துன்பத்தை ஆற்றி இருந்த தன்மையையும் அங்ஙனம் ஆற்றியிருத்தற்கண் தலைவிக்கு உண்டாகிய வருத்தத்தையும் கூறினர். அதுவே முல்லைத் திணையின் பொருள் ஆகும். அதனை அடுத்து, 'ஓர்ப்பனள் கிடந்தோள் அஞ்செவி நிறைய ஆலின,' என்றதனால், தலைவன் துன்பம் நீங்குதற்கு உரிய காரணத்தைக் கூறினர். ஈண்டு அக்காரணம் இன்னது என்பதனை விளக்கிக் கூறாமல் கூறியதனால், கற்போர்க்கு அக்காரணம் இன்னதாம் என அறிதலில் வேட்கை உண்டாகும்படி செய்தனர். பிறகு 89-ஆம் அடியில் உள்ள 'வென்று பிறர்' என்பது முதல் 92-ஆம் அடியில் உள்ள 'வயிரும் வளையும் ஆர்ப்ப' என்பது வரையிலும் உள்ள அடிகளால் தலைவன் பகைவரை முற்றும் வென்று மேற்கொண்ட வினை முடித்துத் தலைவியைக்காண வேட்டுத்திரும்பினமை கூறப்பட்டது. அதனை அடுத்து 92-ஆம் அடியில் உள்ள 'அயிர' என்பது முதல் 99-ஆம் அடிவரையிலும் உள்ள அடிகளால் தலைவற்கு அவ்வேட்கை மிகுதற்கு உரிய காரணங்கள் கூறப்பட்டன. தலைவற்கு அவ்வேட்கையை

ழிருவித்தனவாகிய காயா முதலியவற்றைத் தோற்று வித்தது 'கார்' ஆதலின், தலைவியின் மனத்தை வென்று தன்வயப்படுத்தினதாகிய அக்கார், தனக்கு உட்படாமல் இருந்த தலைவன் மனத்தையும் அவன் வினை முடித்துத் திரும்பும் வரையினும் காத்திருந்து, வினை முடித்துத் திரும்பியவுடன் வென்று தன் வயமாக்கியது எனக் கார்ப் பருவத்தின வென்றியையும் அவ்வடிகளாற் கூறினர் என அறிக. பிறகு 100-ஆம் அடி முதல் 103-ஆம் அடி வரையிலும் உள்ள அடிகளால் தலைவன் தலைவியைக் கருதி விரைந்து வந்ததையும் தலைவியின் துன்பத்தைப் போக்குதற்கு நேர்பட்டதும் இன்னது என விளக்காமற் கூறப்பட்டதும் ஆகிய காரணம் என்பதையும் கூறினர். சிலர் தலைவி ஆற்றியிருந்த இடமாகிய எழுநிலைமாடம் முல்லை நிலமாகிய காட்டில் அமைந்திருந்தது என்பர். தலைவி ஆற்றியிருத்தற்குக் காட்டில் அமைக்கப்பட்ட மாளிகைக்குச் சென்றனள் என்பது பெறப்படும். அங்ஙனம் ஆனால், தலைவி, கூடுதற்குக் குறிஞ்சி நிலத்தில் அமைக்கப்பட்ட மாளிகைக்கும், ஊடுதற்கு மருத நிலத்தில் அமைக்கப்பட்ட மாளிகைக்கும், புலம்புதற்கு நெய்தல் நிலத்தில் அமைக்கப்பட்ட மாளிகைக்கும் சென்றனள் என்று கூறுதல் வேண்டும். கேட்பார்க்கு அருவருப்பை உண்டாக்கும் செய்தி இதனினும் பிறிது ஒன்று உண்டோ? 101-ஆம் அடி 102-ஆம் அடிகளில் 'காடு பிறக்கொழியத், துனைபரி துரக்கும் செலவினர்' என்றது, 'தலைவி ஆற்றியிருந்த எழுநிலை மாடம் அமைந் திருந்த இடம், காடு அன்று, நாடு ஆம்,' என்பதனை நன்கு விளக்கிக்கொண்டிருப்பவும், அவர்கள் அங்ஙனம் கூறுதற்கு உரிய காரணம் யாதோ, எமக்குப் புலனாயிற் றில்லை; அன்பர்கள், ஆய்ந்து கொள்க.

ஸ்ரீ :

# முல்லைப் பாட்டு மூலம்

நன்ந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமர னோக்கி யாய்மகள்,
நடுங்குசுவ லசைத்த கையள், 'கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர்,' என்போள்
நன்னர் நன்மொழி கேட்டன மதனால்,
நல்ல நல்லோர் வாய்ப்புள் ; தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது ; நீநின்
பருவர லெவ்வம் களைமா யோயெனக்

காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப
கான்யாறு தழீஇய அகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்ப மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
உவலைக் கூரை ஒழுகிய தெருவிற்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை இன்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற்றம் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை
பூந்தலைக் குந்தம் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் அரணம் அரணம் ஆக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்,
நெடுங்காழ்க் கண்டம் கோலி அகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யும் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட

நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக் கசைவந் தாங்குத்
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெருமூ தாளர் ஏமம் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி,
'எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறுநீர்க் கன்னல் இனைத்தென்' றிசைப்ப,
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்
திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழையர் ஆக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது
எடுத்தெறி எஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச் [துமிபு
சோறுவாய்த் தொழிந்தோர் உள்ளியும் தோல்
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து
உண்ணா துயங்கும் மாசிந் தித்தும்
ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்

நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசிருந்து பணிக்கு முரசுமுழங்கு பாசறை
இன்துயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கிஇழை நெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறை சொரிதரு மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின, வென்றுபிறர்
வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி உயரி வலனேர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப அயிர
செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப் பிரலையொடு மடமான் உகள
எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்கும் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

ஸ்ரீ :

# முல்லைப் பாட்டு உரை

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை

## அநவயம்:

நேமியொடு வலம்புரி தாங்கு தடக்கை மா பொறித்த நீர் செல நிமிர்ந்த மாஅல் போலப் பாடு இமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு கோடு கொண்டு நனந்தலை உலகம் வளைஇ எழுந்த கொடுஞ்செலவு எழிலி, பெரும் பெயல் பொழிந்த சிறு புன்மாலை

## பதவுரை:

நேமியொடு வலம்புரி தாங்கு தடக்கை — சக்கரத்துடனே வலம்புரி சங்கைத் தாங்கிய, பெரிய கைகளை உடைய, மா பொறித்த — (திருமார்பின்கண்) திருமகளை வைத்த, நீர் செல—மாவலி வார்த்த நீர் (தன்னுடைய திருக்கையிடம்) சென்றதாக, நிமிர்ந்த மாஅல் போல—(உலகை வளைத்து) உயர்ந்து எழுந்த திருமாலைப்போல, பாடு இமிழ் பனிக்கடல் பருகி—ஒலி முழங்கும் குளிர்ச்சியை

உடைய கடல் நீரைக் குடித்து, வலன் ஏர்பு — வலமாய் எழுந்து, கோடு கொண்டு—மலைகளை (முதன்மை ஆகிய இடமாகக்) கொண்டு, நனந்தலை உலகம் வளை இ எழுந்த—அகலத்தைத் தன்னிடத்தே கொண்ட உலகத்தை வளைத்து (உயர்ந்து) எழுந்த, கொடுஞ்செலவு எழிலி—கடிய செலவினை உடைய மேகம், பெரும்பெயல்பொழிந்த—பெரிய மழையைச் சொரிந்த சிறு புல் மாலை-(காதலரைக் காணுதார்க்கு நெடும்பொழுதாகத் தோன்றி வருத்தத்தை விளக்கும்)சிறு பொழுதாகிய அற்பமாகிய மாலைக் காலத்தில்

## பொழிப்புரை:

சக்கரத்துடனே வலம்புரி சங்கைத் தாங்கிய பெரிய கைகளை உடைய (திருமார்பின்கண்) திருமகளை வைத்த (மாவலி வார்த்த) நீர் (தன்னுடைய திருக்கையிற்) சென்றதாக (உடனே உலகை வளைத்து) உயர்ந்து எழுந்த திருமாலைப்போல ஒலி முழங்கும் குளிர்ச்சியை உடைய கடல் நீரைக் குடித்து, வலமாய் எழுந்து, மலைகளை (முதன்மை ஆகிய இடமாகக்) கொண்டு, அகலத்தைத் (தன்னிடத்தே) கொண்ட உலகத்தை வளைத்து உயர்ந்து எழுந்த கடிய செலவினை உடைய மேகம், பெரிய பெயலைச் சொரிந்த(காதலரைக் காணுதார்க்குப் பெரும்பொழுதாகத் தோன்றி வருத்தத்தை விளக்கும்) சிறு பொழுதாகிய அற்பமாகிய மாலைக்காலத்தில்

## விசேடவுரை:

இது, 80-ஆம் அடியில் உள்ள 'இன்துயில் வதியுநற் காணுள் துயருழந்து" என்பதனோடு சென்று இயையும். இங்ஙனம் இயைத்தலைப் 'பாவின் மாட்டுறுப்பு' என்பர். மாட்டுறுப்பின் இலக்கணத்தை,

"அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்."[1]

என்றதனால் அறிக.

இச்சூத்திரத்தின் பொருள், "பொருள் கொள்ளுங்கால் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும், அணுகிக் கிடப்பச் செய்யினும் இரு வகையானும் சென்று பொருள் முடியுமாற்றாற் கொணர்ந்து உரைப்பச் செய்தலை 'மாட்டு' என்னும் உறுப்பு என்று சொல்லுவர் செய்யுள் வழக்கின்," என்பது.

அவற்றுள், இஃது அகன்று பொருள் கிடப்பச் செய்ததாம் என அறிக.

'நேமியொடு .................... மாஅல் போல'

என்பது உவமானம்.

'பாடு இமிழ் ................. செலவு எழிலி'

என்பது உவமேயம்.

உவமானத்தை உவமை என்றும் கூறுப. உவமை, உவமேயத்தை விளக்க வருவது.

அறிய வேண்டிய பொருள் உவமேயமே ஆதலின், அதனைப் 'பொருள்' என்றும் கூறுவர்.

'பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு, கோடு கொண்டு, உலகம் வளைஇ, எழுந்த எழிலி' எனவும், 'கொடுஞ்செலவு எழிலி' எனவும் இயைக்க.

"மேகத்துக்கு இடமாவது விண். ஆதலின், 'விண் கொண்டு எழுந்த' என்று கூறுதல் வேண்டும். அங்ஙனம்

1 தொல். பொருள். செய். சூ. 210.

கூறாது, 'கோடுகொண்டு எழுந்த' என்று கூறியது என்?'' என்னின், மேகம் மலைகளிற்பெய்யும் நீரே, ஆறுகளாய்ப் பெருகி உலகிற்குப் பெரும்பயனைச் செய்வதாயிருத்தலைக் குறிப்பித்தற்குக் கூறினர் என்க.

'''பாடிமிழ் பனிக்கடல் பருகி' என்னும் பொருள் அடை உவமையிற் பொருந்துதல் எங்ஙனம்?'' எனின், 'ஏற்பார்க்கு இனிய மொழிகளைக் கூறி அளிக்கும் அன்பை உடைய மாவலி வார்த்த நீரை இறைவன் தன் கையில் ஏற்றனன்,' என்றதனாற் பொருந்தும் என்க. '''வலனேர்பு' என்னும் பொருள் அடை உவமையிற் பொருந்தாதால்,'' எனின், அதற்கு, 'மாவலிக்கும், விண்ணவர்க்கும், மண்ணவர்க்கும் வன்மை ஆக எழுந்து' எனப் பொருள் கொள்ளின் பொருந்தும் என்க.

மாவலிக்கு வன்மை ஆதலாவது, எவர்க்கும் அறிவரிய இறைவன், எளிதின் எதிர்வந்து கை ஏற்பத் தான் அப்பெருமான் கையில் நீர் வார்த்ததனால் ஆகிய புகழ், உலகில் என்றும் அழியாமல் நின்று விளங்கல். விண்ணவர்க்கு வன்மை ஆதலாவது, அவர்கள் தங்கட்கு அரக்கர்களால் உளவாகும துன்பங்களின் நீங்கி இன்புற்றிருத்தல் மண்ணவர்க்கு வன்மை ஆதலாவது, மண்ணவர்கள் அப்பெருமான் திருவடியினின்று வந்த கங்கையில் நீராடித் தூய்மை எய்தல் என்க.

'' ஆயினும், 'கோடு கொண்டு எழுந்த' என்னும் பொருள் அடை, உவமையிற் பொருந்தாதால்,'' எனின், பகீரதன் வேண்டுகோளாற் சிவபிரான் வானினின்று வந்த கங்கைநீரைத் தன் முடியில் ஏற்றருளினன் என்னும் வரலாற்றால் அதுவும் பொருந்தும் என்க.

'''கொடுஞ்செலவு' என்னும் பொருள் உவமையிற் பொருந்துமோ?'' எனின், இறைவன், மாவலி வார்த்த நீர்

தன் கையிற் சென்றதுடன் ஓங்கி வளர்ந்தனன் என்ப ஆகலின், பொருந்தும் என்க.

"அங்ஙனம் பொருளின் அடைகள் உவமையிற் பொருந்தும் எனினும், 'நேமியொடு வலம்புரி தாங்கு தடக்கை' எனவும், '(மார்பின்கண்) மாபொறித்த' எனவும் கூறிய உவமையின் அடைகள், பொருளிற்பொருந்து மோ?" எனின், நேமி, அப்பெருமானாற் செலுத்தப்பட்டுத் தீயவரை அழித்தல் போல, மேகத்தாற் சொரியப்படும் நீர், உலகத்து உயிர்களின் பசி முதலிய தீமைகளை ஒழித்தலானும், வலம்புரி, அப்பெருமானுடைய திரு வாயினின்றும் முழங்குதல் போல, மேகம் வானினின்று முழங்குதலானும், திருமகள், அப்பெருமான் திருமார் பகத்துப் பொருந்தியிருத்தல் போல, மின்னல் மேகத்தி னகத்துப் பொருந்தியிருத்தலானும் பொருந்தும் என்க.

'மாஅல்' என்பது செய்யுளிசை அளபெடை. வளைத்து என்னும் வினை எச்சம் விகாரப்பட்டு அளபெடுத் தது; இது, சொல்லிசையளபெடை. ஈண்டுக்'கடல்' என் றது, 'எழிலி பருகி' என்பதனால், அதன் நீரை உணர்த் திற்று; இது, முதலாகுபெயர். வருவிக்கப்பட்ட சொற்கள் இசையெச்சம்.

'எழிலி, பெரும்பெயல் பொழிந்த சிறு புன்மாலை' என இயைக்க. இதன்கண் பெருமை சிறுமை என்பன முரண்தொடை.

இதனால், முல்லைக்கு உரிய பெரும்பொழுது ஆகிய காரும், சிறு பொழுது ஆகிய மாலையும் கூறப்பட்டன. அப்பொழுதுகள் முல்லைக்கு உரிய என்பதை,

"காரு மாலையு முல்லை."[1]

---

[1] தொல். பொருள். அகத்திணையியல், சூ. 6.

என்றதனால் அறிக. மாலைக்காலம் பகல் இரவுகளைப் போல நெடும்போது நில்லாமற் சிறிது போதே நிற்பதாகலின், அதனைப் 'புன்மாலை' என்றார். ஆயினும், அது காதலரைக் காணாதார்க்கு நெடும்போது போலத்தோன்றி அவர்களை வருத்துவதாகலின், 'காதலரைக் காணாதார்க்கு நெடும்பொழுதாகத் தோன்றி வருத்தத்தைச் செய்யும்' என்னும் சொற்கள் ஈண்டு வருவித்துரைக்கப்பட்டன. ஈண்டுப்

'பாசறை, இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து'[1]

என்றதனை நோக்குக.

அது, காதலரைக் காணாதார்க்கு நெடும்பொழுதாகத் தோன்றும் என்பதனையும், அஃது அவர்களை வருத்தும் என்பதனையும் முறையே,

'மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.'[2]

எனவும்,

'மாலைக்கல் லாரம் புலிக்குதை யாசிற்பர்'[3]

எனவும் வருவனவற்றான் அறிக.

அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்

---

[1] முல்லை. அடி, 80.
[2] நளவெண்பா, சுயம்வரகாண்டம், செய். 99.
[3] திருவரங்கத்தந்தாதி, செய். 14.

உறுதுய ரலமர னோக்கி யாய்மகள்,
நடுங்குசுவ லசைத்த கையள், 'கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர்,' என்போள்
நன்னர் நன்மொழி கேட்டன மதனால்,
நல்ல நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது; நீநின்
பருவர லெவ்வம் களைமா யோயெனக்
காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப

## அநுவயம்:

காட்டவும் காட்டவும் கலுழ் சிறந்து காணாள் பூப்போல் உண்கண் புலம்பு முத்து உறைப்பப் பெருமுது பெண்டிர், "மாயோய், நல்லோர், அருங்கடி மூதூர் மருங்கிற் போகி, யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப, அரும்பு அவிழ் நறுவீ முல்லை அலரி நாழி கொண்ட நெல்லொடு தூஉய்க் கைதொழுது, விரிச்சி நிற்ப, நடுங்கு சுவல் அசைத்த கையள் ஆய்மகள், சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் உறுதுயர் அலமரல் நோக்கிக் 'கைய கொடுங்கோல் கோவலர் பின் நின்று உய்த்தரத் தாயர் இன்னே வருகுவர்,' என்போள் நன்னர் நன்மொழி கேட்டனம்; வாய்ப்புள் நல்ல; தலைவர் தெவ்வர் முனை கவர்ந்து கொண்ட திறையர், வினை முடித்து வருதல் வாய்வது; நீ நின் பருவரல் எவ்வம் களை," என்பது

## பதவுரை:

(தலைவன் வினைவயிற் செல்லுதலைக் குறிப்பால் உணர்ந்த தலைவி, உள்ள மெலிவினால் வாடியிருக்க, தலைவன் அதனைக் கண்டு, "என் ஆருயிர் அனையாய், கார்

காலத்து வருவன்; அது வரையினும் நீ ஆற்றியிரு; இப்பொழுது நான் வினைவயிற் செல்லாதிருத்தல் ஏதமாம்,'' என்று கூறிப் பின்னும்,)

காட்டவும் காட்டவும்— (புகழும் மானமும்) எடுத்து விளக்கி வற்புறுத்தவும் (தோற்றத்தாற் சிறந்த பகைவருடைய) பெருமை கூறி விளக்கி வற்புறுத்தவும், கலுழ் சிறந்து— (அன்பின் மிகுதியாற்) கலக்கம் மிகுந்து, காணாள் — ('இவை அரசருக்கு வேண்டும்,' என்று தன் மனத்திற்) கருதாதவளாய் இருத்தலின், பூப்போல்— (அவளுடைய) செந்தாமரைப் பூவைப் போன்ற, உண்கண்—மையுண்ட கண்கள், புலம்பு முத்து உறைப்ப— (தாரைதாரையாகச் சொரியாமல், தனித்தனியாக வீழ்கின்ற முத்துப்போன்ற துளிகளைத்துளிப்ப, (அதனைத் தலைவன் கண்டு, தான் மேற்கொண்ட வினையின் இன்றியமையாமையைக் கருதி, ''மேலும் இவளை நாம் ஆற்றிக்கொண்டிருத்தற்கு இது சமயம் அன்று,'' என்று எண்ணி, வினைமேற்சென்றுவிட்டனன். தலைவி வாட்டம் நீங்காதவளாய் இருப்பத் தலைவியின் அங்கிலைமையைக் கண்ட) பெருமுது பெண்டிர்— (அறிவின்) பெருமையை உடைய முதிய மாதர்கள் (தலைவியை நோக்கி), மாயோய்—மாமை நிறத்தை[1] உடையவளே, நல்லோர்— நற்சொற் கேட்டற்கு உரியோர், அருங்கடி மூதூர் மருங்கின் போகி—(படைத் தலைவர்களது ஏவலாலே) அரிய காவலை உடைய பழைய ஊரின் பக்கத்து! (ப் பாக்கத்திற்) போய், யாழ் இசை இன

[1] மாமை நிறம் இவ்விதமானது என்பதை, ''மாமை நிறம், நார் உரிக்கப்பட்ட ஆம்பல் தண்டு போன்ற நிறமாம். அதனை, 'நீர் வளர் ஆம்பல் தூம்புடைத்திரள்கால் நார் உரித்தன்ன மதனின் மாமை' (நற. செ 6) என்றதனால் அறிக,'' என டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்பால் அறிக.

வண்டு ஆர்ப்ப—யாழின் இசை போன்ற இனிய ஓசையினை உடைய கூட்டமான வண்டுகள் ஒலிக்குமபடி, அரும்பு அவிழ்—அரும்புகள் இதழ்கள் அவிழ்ந்த, நறுவீ முல்லை அலரி—நல்ல மணத்தை உடைய பூக்களாகிய முல்லை மலர்களை, நாழி கொண்ட நெல்லொடு தூஉய்—நாழியிற் கொண்டுபோன நெல்லுடனே தூவி, கைதொழுது — (திருமகள் நாதனைக் கருதிக்) கை கூப்பி வணங்கி, விரிச்சி நிற்ப — விரிச்சியைக் கேட்பதற்காக நிற்க, (அப்பொழுது) நடுங்கு சுவல் அசைத்த கையள் ஆய்மகள்—(குளிராலே) நடுங்குகின்ற தோளின் மேலே கட்டின கையை உடையவளாய் நின்ற ஆயர் குல நங்கை, சிறு தாம்பு தொடுத்த — சிறிய தாம்பாலே (கால்) கட்டப்பட்டுள்ள, பசலைக் கன்றின் — வருத்தத்தைக் கொண்ட கன்றுகளுடைய, உறுதுயர் — (பால் உண்ணாமையாலே) உண்டான துன்பத்தினல், அலமரல் நோக்கி—(தாய்பபசுக்கள் வரும் வரும் என்று நாற்புறமும்) சுழன்றுகொண்டிருக்கும் தன்மையைப் பார்த்து, ('ஆய்மகள் நோக்கி' என இயைக்க.) கைய கொடுங்கோல் கோவலர் — கையிற் கொள்ளப்பட்டனவாகிய கொடிய கோல்களை உடையவர்களாகிய இடையர்கள், பின் நின்று உய்த்தர — பின்னே நின்று செலுத்துதலைச் செய்தலால் (செலுத்துதலால்), தாயர் இன்னே வருகுவர் — (வயிறு நிரம்ப மேய்ந்து விட்டு உங்கள்) தாய்மார்கள் இப்பொழுதே வருவார்கள், என்போள்—என்று சொல்லாநின்றவளுடைய, நன்னர் நன்மொழி கேட்டனம்—நன்மையைச் செய்யும் அந்த நல்ல சொற்களை (அந்நல்லோர் சொல்லைக்) கேட்டோம்; வாய்ப்புள் நல்ல — அந்நற்சகுனச் சொற்கள் நல்லனவாகும்; அதனல்— ஆதலின், தலைவர் முனை கவர்ந்து— (நம்முடைய) தலைவர் (வஞ்சிமாலை சூடிச்சென்று) போர்க்

களத்தில் (பகைவர்களை வென்று) அவர்களுடைய மண்ணைக்) கைப்பற்றிக்கொண்டு, கொண்ட திறையர்—(அம் மண்ணின்பொருட்டு அரசர்களிடத்தினின்று) கொள்ளப்பட்ட திறையினை உடையவராய், வினை முடித்து வருதல் வாய்வது—(தாம் எடுத்துக்கொண்ட) வினையை முடித்து (நாம் கருதியபடி) வருதல் உண்மை; நீ நின் பிருவரல் எவ்வம் களை என—நீ உன் மனத்தடுமாற்றத்தால் உள்தாகிய துன்பத்தைப் போக்கு என்று கூற

## பொழிப்புரை:

தலைவன் வினைவயிற் செல்லுதலைக் குறிப்பால் உணர்ந்த தலைவி, உள்ள மெலிவால் வாடி இருக்கத் தலைவன், "என் ஆருயிர் அனையாய், நான் கார் காலத்து வருவன்; அது வரையிலும் நீ ஆற்றி இரு. இப்பொழுது நான் வினைவயிற்செல்லாதிருத்தல் ஏதமாம்," என்று கூறிப் பின்னும், (புகழும் மானமும்) எடுத்து விளக்கி வற்புறுத்தவும், (தோற்றத்தாற் சிறந்த பகைவருடைய) பெருமை கூறி விளக்கி வற்புறுத்தவும், (அன்பின் மிகுதியாற்) கலக்கம் மிகுந்து ('இவை அரசருக்கு வேண்டும்,' என்று தன் மனத்திற்) கருதாதவளாயிருத்தலின், (அவளுடைய) செந்தாமரைப் பூவைப்போன்ற மையுண்ட கண்கள் (தாரைதாரையாகச் சொரியாமல்) தனித்தனியாக வீழ்கின்ற துளிகளைத் துளிக்க, (அதனைத் தலைவன் கண்டு) தான் மேற்கொண்ட வினையின் இன்றியமையாமையைக் கருதி, 'இவளை மேலும் ஆற்றிக் கொண்டிருத்தற்கு இது சமயம் அன்று,' என்று எண்ணி வினைமேற் சென்றுவிட்டனன். தலைவியின் அந்நிலையைக் கண்ட) அறிவின் பெருமையை உடைய முதிய

மார்கள், (தலைவியை நோக்கி) "மாமை நிறத்தை உடையவளே, நற்சொற்கேட்டற்கு உரியோர் (படைத்தலைவர்களது ஏவலாலே)• அரிய காவலை உடைய ஊரின் பக்கத்துப் பாக்கத்திற்குப் போய்,யாழினது இசையைப் போன்ற இனிய ஓசையை உடைய கூட்டமான வண்டுகள் ஒலிக்கும்படி அரும்புகள் இதழ்கள் அவிழ்ந்த நல்ல (மணத்தை உடைய) பூக்களாகிய முல்லை மலர்களை நாழியிற் கொண்டு போன நெல்லுடனே தூவித் (திருமகள் நாதனைக் கருதிக்) கைகூப்பி வணங்கி, விரிச்சியைக் கேட்டற்காக நிற்க (அப்பொழுது குளிராலே) நடுங்குகின்ற தோளின் மேலே கட்டின கையை உடையவளாய் நின்ற ஆயர் குல நங்கை, சிறிய தாம்பாலே (கால்) கட்டப்பட்டுள்ள வருத்தத்தைக்கொண்ட கன்றுகளினுடைய (முலை உண்ணுமையாலே) உண்டான துன்பத்தினால் (தாய்ப் பசுக்கள் வரும் வரும் என்று நாற்புறமும்) சுழன்றுகொண்டிருக்கும் தன்மையைப் பார்த்து. 'கையிற்கொள்ளப்பட்டனவாகிய கொடிய கோல்களை உடையவர்களான இடையர்கள், பின்னே நின்று செலுத்துதலைச் செய்தலால் (செலுத்துதலால், வயிறு நிரம்ப மேய்ந்துவிட்டு) உங்களுடைய தாய்மார்கள் இப்பொழுதே வருவார்கள்,' என்று சொல்லாநின்றவளுடைய நன்மையைச் செய்யும் அந்த நல்ல சொற்களை (அந்நல்லோர் சொல்லக்) கேட்டோம்: அந்நற்சொற்கள் நல்லனவாகும்; ஆதலின், நம்முடைய தலைவர், (வஞ்சி சூடிச் சென்று) போர்க்களத்தில் (பகைவர்களை வென்று அவர்கள் மண்ணைக்) கைப்பற்றிக் கொண்டு (அம்மண்ணின்பொருட்டு அவர்களிடத்தினின்று) கொண்ட திறையினை உடையவராய்த் தாம் எடுத்துக்கொண்ட வினையை முடித்து, "(நாம் கருதியபடி) வருதல் உண்மை; நீ (உன்மனத் தடுமாற்றத்தால் உளதான) துன்பத்தைப் போக்கு," என்று கூற

## விசேடவுரை:

'அவற்றைக் கேட்ட தலைவிக்குத் தெளிவு பிறந்தது; அதனால், அவள் ஆற்றியிருக்க, முன்னே தலைவன் குறித்த கார் காலம் வந்தது,' என இயையும்.

ஈண்டு இங்ஙனமே பொருள் கூறுதல் வேண்டும் என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறும் காரணங்கள் நோக்கற்கு உரியனவாகும். அவற்றை அடியிற்காண்க:

"இங்ஙனம் பொருள் கூறாமல், 'தலைவியது இரக்க மிகுதி கண்டு, பெருமுது பெண்டிர், விரிச்சி கேட்டு வந்து, 'தலைவர் வருவாராதல் வாய்வது; நின் எவ்வம் களை,' என்று பல்கால் ஆற்றுவிக்கவும், ஆற்றாளாய்த் துயருழந்து (80) புலம்பொடு (81) தேற்றியும், திருத்தியும் (83) நடுங்கி நெகிழ்ந்து(84)கிடந்தோள்' (88)எனப்பொருள் கூறியக்கால், நெய்தற்குரிய இரங்கற்பொருட்டன்றி, முல்லைக்குரிய இருத்தற்பொருட்டு ஆகாமை உணர்க. அன்றியும், தலைவன், காலம் குறித்தல்லது பிரியான் என்பதூஉம், தலைவிக்கு வருத்தம் மிகும் என்பதூஉம், அது, பாலையாம் என்பதூஉம், அவ்வாற்றாமைக்கு இரங்கல் நிகழ்ந்தால் நெய்தல் ஆம் என்பதூஉம் நூற்க்கருத்தாதல் உணர்க."

"காட்டவும் காட்டவும்" என்பதற்குப்

"புகழு மானமும் எடுத்துவற் புறுத்தலும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்"[1]

என்பவற்றை நோக்கிப் பொருள் கூறினர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். அப்பொருளே ஈண்டுக் கூறப்பட்டது என அறிக.

[1] தொல். பொருள். அகத்திணையியல், சூ. 41.

"'கைதொழுது' என்ற இடத்தில் 'திருமகள் நாதனை மனத்திற்கருதி' என்று கூறியது என்னை?" எனின்,

"மாயோன் மேய காடுறை உலகமும்"[1]

என்றார் ஆதலானும், இது, முல்லைப்பொருள் ஆதலானும் கூறப்பட்டது என்க.

ஆய்மகள், "கைய கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தரத் தாயர் இன்னே வருகுவர்," என்றது உவமையாகவும், "தலைவர், தெவ்வர் முனை கவர்ந்து, கொண்ட திறையர் வினை முடித்து வருதல் வாய்வது," என்றது உபமேயமாகவும் நின்றன; உபமேயத்தில் உள்ள 'வினை முடித்து' என்பதனை நோக்கி, உபமானத்தில் 'வயிறு நிரம்ப மேய்ந்துவிட்டு' என்னும் சொற்கள் வருவித்து உரைக்கப்பட்டன; என்னெனின், பசுக்கள் சென்ற வினை, மேய்தல் ஆதலானும், அவை வயிறு நிரம்ப மேய்ந்துவிட்டு வருதலே அவை வினைமுடித்து வருதலாம் ஆதலானும் என அறிக. அதனாற் கனறுகளுக்குப் பால் நிரம்பக் கிடைக்கும் என்பதும் குறிக்கப்பட்டதாயிற்று.

"'கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர,'[2]

என்றபடி, பசுக்கள் தம்முடைய கன்றுகளை எண்ணித் தாமே விரைந்து வருவனவாயிருக்கவும், 'கோவலர் பின்னின்றுய்த்தரத் தாயர் இன்னே வருகுவர்,' என்றது என்?" எனின், கோவலர்கள், பகல் எல்லாம் தங்கள் மனையைப் பிரிந்திருந்தவர்கள் ஆதலின், தாங்கள் விரைந்து சென்று தங்கள் மனையை அடைதல் வேண்டும் என்னும் வேட்கையால், அங்ஙனம் விரைந்து செல்லும்

---

[1] தொல். பொருள். அகத்திணையியல், சூ. 5.
[2] திருப்பாவை, பா. 12.

பசுக்களை மேலும் விரைவாகச் செல்லும்படி உய்த்தனர் என்பது தோன்ற அங்ஙனம் கூறினர் என்பது. 'பின்னின்று உய்த்தர' என்றது, அவர்கள் பசுக்களைச் செலுத்தும் இயல்பு கூறப்பட்டதாம் என்க. இது, தலைவன் தலைவியை விரைந்து சென்று காண வேண்டும் என்னும் வேட்கையால் இயல்பாகவே விரைந்து செல்லும் குதிரைகளை மேலும் விரைவாகச் செலுத்தினன் என்பதற்கு உவமையாய் நின்றது. இதுவும், 'அகன்று பொருள் கிடப்பச் செய்த மாட்டுறுப்பே' ஆகும்.

"தலைவன் வினைவயிற் செல்லுதலைத் தலைவி குறிப்பால் உணரும் விதம் யாது?" எனின், தலைவன், 'வினைவயிற்செல்லுதற்கு இவள் தடை ஆவளோ!' என்னும் அச்சம் மனத்தில் தோன்ற, அவ்வச்சத்தோடு தலைவியின்பாற்சென்று, அவளை மிகுதியாகப் பாராட்டுவான். அப்பாராட்டு, நாளும் செய்யும் பாராட்டின் மிக்கதாயிருக்கும் குறிப்பால், தலைவன் தன்னைப் பிரிந்து வினைவயிற் செல்லக் கருதியிருக்கின்றனன் என்பதையும், அதனால் அவன் தன் மனத்திற்கொண்ட அச்சத்தையும் தலைவி உணர்வள் என்க. அதனை,

> "செய்பொருள் அச்சமும் வினைவயிற் பிரிவும்
> மெய்பெற உணர்த்தும் கிழவிபா ராட்டே."[1]

என்னும் சூத்திரத்தானும் அதன் உரையானும் அறிக.

'கிழவி பாராட்டு' என்பதற்குத் 'தலைவன் தலைவியைப் பாராட்டும் பாராட்டு' என்பது பொருள்.

'காணாள்' என்பது முற்றெச்சம். 'முத்து' என்பது உவமை ஆகுபெயராய்க் கண்ணீர்த்துளிகளை உணர்த்தியது. 'ஆர்ப்ப' என்னும் செயவென் எச்சம், ஈண்டுக் காரியப் பொருளதாய் நிற்றலின், இதன் காலம் எதிர்

1 தொல். பொருள். பொருளியல், சூ. 38.

காலமாம் என்க. 'என்போள்' என்பது, வினையாலணை யும் பெயர். இதன் ஈற்றயல் ஆகாரம் ஓகாரம் ஆயிற்று. 'உய்த்தர' என்பதற்குத் தொடர் நோக்கிச் 'செலுத்து தலைச் செய்தலால்' என்று பொருள் கூறப்பட்டது; எனினும், 'செலுத்துதலால்' என்பதே அதன் பொருள் ஆகும். 'உய்' என்பது ஈண்டு முதனிலைத் தொழிற் பெயராய் நின்றது; 'தர' என்னும் செயவென்னும் வாய் பாட்டு வினையெச்சம், ஈண்டுக் காரணப் பொருட்டாய் நின்றது; ஆகலின், இதன் காலம் இறந்த காலம் என்க. 'அலரி' என்பதற்கு 'அலர்தலை உடையது' என்பது பொருள்; இதில் 'அலர்' என்பது பகுதி; இகரம் வினை முதற்பொருள் விகுதி. 'உறுதுயர்' என்பது வினைத் தொகை. 'திறையர்' என்னும் குறிப்பு முற்று, ஈண்டுத் 'திறையினை உடையவராய்' என எச்சப்பொருள் தந்து நின்றது. 'தாய்' என்பது இணைப் பொதுப் பெயர். ஆதலின், பசுக்களை ஈண்டுத் தாயர் என்றார். "அங்ங னம் ஆயின், ஈண்டு அஃறிணையைக் குறித்தலின், இரு திணையினும் எய்துதற்கு உரியதாகிய 'கள்' விகுதி தந்து 'தாய்கள்' என்று கூறாமல், உயர்திணைக்கு உரியதாகிய 'அர்' விகுதி கொடுத்துத் 'தாயர்' என்றது என்?" எனின், ஆய்மகள், கன்றுகளின் துயரங்கண்டு இரங்கிக் கூறுகையில் 'தாய்ப்பசுக்கள் வந்து, இக்கன்று களின் துயரம் போக்கும்,' என்று கருதி, அப்பசுக்களின் பால் உவப்புக்கொண்டனள் ஆதலின், அவ்வுவப்புத் தோன்றத் 'தாயர்' என்று கூறினள் என்பது தோன்ற, 'அர்' விகுதி கொடுத்துக் கூறினர் என்க. இஃது, உவப்பினால் வந்த திணை வழுவமைதியாம் என்க.

கான்யாறு தழீஇய அகனெடும் புறவிற்

25\. சேணாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி

வேட்டுப்புழை அருப்ப மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி

## அநுவயம் :

'இடுமுள் புரிசை' என்பதனை 'முள் இடுபுரிசை' எனவும், 'படுநீர்ப்புணரியின்' என்பதனைப் 'புணரிபடுநீரின்' எனவும் இயைக்க.

## பதவுரை :

கான் யாறு தழீஇய — காட்டாறு சூழ்ந்த, அகல் நெடும்புறவின்—அகன்ற நெடிய காட்டில், சேண் நாறு பிடவமொடு—நெடுந்தூரத்தினும் மணம் வீசும் பிடவத்தோடு , பைம்புதல் எருக்கி—(மற்றைப்) பசிய புதர்களையும் வெட்டி, வேட்டுப்புழை அருப்பம் மாட்டி — (பகைவர்களுடைய நிலத்துக்குக் காவலாய் உள்ள) வேட்டுவச்சாதியினருடைய (கதவிட்டுப்புகும்) சிறு வழியைக் கொண்ட அரண்களை அழித்து, காட்ட — காட்டில் உள்ளனவாகிய, முள் இடு புரிசை—முட்களால் அமைக்கப்படும் மதிலை, ஏம் உற வளைஇ—காவலாய் இருக்கும்படி வளைத்து அமைக்கப்பட்டு, புணரிபடுநீரின் — அலைகள் பொருந்திய கடலைப்போல, பரந்த பாடி — பரவியுள்ள பாசறையின்கண்.

## பொழிப்புரை :

'காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டில், தூரத்தினும் மணம் வீசும் பிடவத்தோடு (மற்றைப்) பசிய புதர்களையும் வெட்டி (ப்பகைவர்களுடைய நிலத்துக்குக் காவலாய் உள்ள) வேட்டுவச்சாதியினருடைய (கதவிட்டுப்

புகும்) சிறு வழியைக் கொண்ட அரண்களை அழித்து, காட்டின்கண் உள்ளனவாகிய முட்களால் அமைக்கப்படும் மதிலைக் காவலாய் இருக்கும்படி வளைத்து அமைக்கப்பட்டு, அலைகள் பொருந்திய கடலைப் போலப் பரவியுள்ள பாசறையின்கண்

## விசேடவுரை:

ஈண்டுக் கூறிய பாச்சறை,

"கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்"[1]

என்னும் சூத்திரத்திற்கூறிய இரு வகைப் பாசறையுள், கூதிர்ப் பாச்சறை என்றறிக. "இதனை வேனிற் பாசறை என்னல் ஆகாதோ?" எனின், நற்சொல் கூறிய ஆய்மகளைப்பற்றி, "நடுங்குசுவல் அசைத்த கையள்" என்று கூறுதலின், அவ்வாறு கூறலாகாது என்க. "ஆயினும், வேனிற்பாசறை எனிற் காலம் நீட்டியாது; கூதிர்ப் பாசறை கார்காலத்துக்கு முன் ஆன முதுவேனிற்காலம் இரண்டு மாதமும், அதற்குமுன் ஆன இளவேனிற் காலம் இரண்டு மாதமும், அதற்கு முன் ஆன பின் பனிக் காலம் இரண்டு மாதமும், அதற்கு முன் ஆன முன்பனிக் காலம் இரண்டு மாதமும், அதற்கு முன் ஆன கூதிர்க் காலம் இரண்டு மாதமும் கூடி, ஆகப்பத்து மாதங்கள் இடைப்படுதலின், காலம் நீட்டிக்குமே!" எனின், ஓதற் பிரிவு ஒழிந்த பிரிவுகளுக்கு ஓராண்டு எல்லை இருத்தலின், அது குற்றம் அன்று என்க.

ஓதற்பிரிவுக்கு உரிய கால எல்லையையும், ஒழிந்த பிரிவுகளுக்கு உரிய கால எல்லையையும்,

[1] தொல், பொ, புறத்திணை இயல், சூ, 22.

"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது."[1]
"வேந்துறு தொழிலே யாண்டின தாகும்."[2]
"ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்."[3]
என்னும் சூத்திரங்களால் அறிக.

'தழீஇய' என்பது, சொல்லிசையளபெடை. 'அகல் நெடும்புறவு' என்பதை 'அகல் புறவு, நெடும்புறவு' என இயைக்க. இவற்றுள், முன்னது, வினைத்தொகை; பின்னது, பண்புத்தொகை. 'காட்ட' என்பது, குறிப்பு வினையாலணையும் பெயர்; இதன்கண் 'காடு' என்னும் இடப்பெயர் முதனிலையாய் (பகுதியாய்) நின்றது. 'ஏமம்' என்பது கடை குறைந்து 'ஏம்' என நின்றது. 'வளைஇ' என்பதும் சொல்லிசையளபெடையே. 'புணரிபடு' என்றதனால் ஈண்டு 'நீர்' என்றது கடலை உணர்த்தியது. இது, காரணவாகு பெயர். இதனைச் சினையாகு பெயர் என்றலுமாம்.

உவலைக் கூரை ஒழுகிய தெருவிற்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை இன்குளகு உண்ணாது நுதலுடைத்
தயினுனை மருப்பிற்றம் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப

## அநுவயம் :

'ஓங்குநிலை கரும்பொடு கதிர் மிடைந்தியாத்த வயல் விளை இன்குளகு' என்பதனை 'ஓங்கு நிலைக்கரும்பொடு

1-3. தொல். பொருள். கற்பியல், சூ 47-49.

வயல் விளை கதிர் மிடைந்தியாத்த இன்குளகு' எனவும், 'கவைமுட்கருவியின் வடமொழி பயிற்றிக் ' கல்லா இளைஞர் கவளம் கைப்ப' என்பதனைக் 'கல்லா இளைஞர், வடமொழி பயிற்றிக் கவைமுட்கருவியின் கவளம் கைப்ப' எனவும் இயைக்க.

## பதவுரை :

உவலைக் கூரை ஒழுகிய தெருவில் — தழையாலே வேயப்பட்ட கூரைகள் ஒழுங்குபட அமைந்துள்ள தெருவில், கவலை முற்றம்—நாற்சந்தியான முற்றத்தின்கண், காவல் நின்ற—காவலாய் நின்ற, தேம்படு கவுள—மதம் பாய்கின்ற கன்னத்தினை உடையனவாகிய, சிறுகண்யானை —சிறிய கண்களை உடைய யானைகள், ஓங்குநிலைக் கரும்பொடு—வளரும் தன்மையை உடைய கரும்புகளோடு, வயல் விளை கதிர் மிடைந்து யாத்த—வயல்களில் விளைந்த நெற்கதிர்களை (இடையிலே) நெருங்க இட்டுக் கட்டிப் போட்ட, இன் குளகு உண்ணாது—இனிய உணவை உண்ணமல், நுதல் துடைத்து — (அவற்றாலே தம்முடைய) நெற்றியைத் துடைத்துக்கொண்டு, அயில்நுனை மருப்பின்—கூர்மை ஆகிய முனையை உடைய கொம்புகளின்மேல் (இடப்பட்டுள்ள), கையிடைக் கொண்டென— (தம்முடைய) துதிக்கையிற் கொண்டு நின்றனவாக, கல்லா இளைஞர்—(அடிநாளிலே கற்க வேண்டிய நூற்களை முறைப்படி) கற்காத இளைஞர்கள், வடமொழி பயிற்றி— (யானைகளை நடத்துதற்காகத் தாம் கற்றுக்கொண்ட) வடசொற்களைப் பல முறைசொல்லி, கவை முள் கருவியின்— (பல) பிரிவாகிய முட்களை உடைய குத்துக்கோலாலே, கவளம் கைப்ப—கவளத்தைத் தின்னும்படி குத்த

## பொழிப்புரை :

தழையாலே வேயப்பட்ட கூரைகள், ஒழுங்குபட் அமைந்துள்ள தெருவில் நாற்சந்தியான முற்றத்தின்

க்ண் காவலாய்நின்ற மதம் பாய்கின்ற கன்னத்தை உடையனவாகிய யானைகள், வளருந்தன்மையை உடைய கரும்புகளோடு வயல்களில் விளைந்த நெற்கதிர்களை (இடையிலே) நெருங்க இட்டுக் கட்டிப்போட்ட இனிய உணவை உண்ணுமல் (அவற்ருலே) தம்முடைய நெற்றியைத் துடைத்துக் கொண்டு, கூர்மை ஆகிய முனையை உடைய தந்தங்களின்மேல் இடப்பட்டுள்ள தம்முடைய துதிக்கையிற் கொண்டு நின்றனவாக (அடிநாளிலே கற்க வேண்டிய நூற்களை முறைப்படி) கற்காத இளைஞர்கள், (யானைகளை நடத்துதற்காகத் தாம் கற்றுக்கொண்ட) வடசொற்களைப் பல முறை சொல்லிப் (பல) பிரிவாகிய முட்களை உடைய குத்துக்கோலாலே கவளத்தைத் தின்னும்படி குத்த

## விசேடவுரை :

'யாத்த' என்பதற்குக் 'கட்டின' என்பது பொருள்; அஃது ஈண்டுக் 'கட்டிப்போட்ட' என்னும பொருள் தந்து நின்றது. 'இன்குளகு' என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'சாவியையும், அதிமதுரத்தழையையும்' என்று பொருள் கூறினர். "'தம் கையிற் கொண்டன' என்பதே போதியதாக, அதற்கு 'அயினுனை மருப்பின்' என்னும் அடை கொடுத்தது என்?" எனின், அந்த யானைகள், காவலிற்சென்ற கருத்தினவாய் நின்றமையின், அவ்வுணவை உண்ணவில்லை என்பதனை உணர்த்துதற்குக் கொடுக்கப்பட்டது என்க. 'அயில் நுனை மருப்பு' என்பதன்கண் உள்ள 'அயில் நுனை' என்பது, 'எவரேனும் தீமை புரிய வரின் அவரைத் தாக்குதற்கு உரிய தன்மையை உடைய மருப்பு' என்னும் கருத்தைத் தோற்றுவித்து நிற்றலையும் ஈண்டு நோக்குக. யானைகளின் அக்கருத்தை அறியும் அறிவிலர் என்பார், 'கல்லா' என்றும், கற்றிலராயினும் அனுபவமேனும் இருப்பின் அக்

கருத்தை அறிந்துகொள்வர்; அதுவும் இல்லாதவர்கள் என்பார், 'இளைஞர்' என்றும் கூறினர். 'கைத்தல்' என்பதன் பொருள் 'அலைத்தல்' என்பது; அஃது ஈண்டுக் 'குத்தல்' என்னும் பொருள் தந்து நின்றது. 'உவலைக்கூரை' என்பது மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. 'காவல் நின்ற' என்ற இடத்தில் 'ஆக' என்னும் எச்சவினையை வருவித்துரைக்க.

கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறு வாங் கிருக்கை

## அநுவயம் :

இதனைக் 'கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை, கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான், முக்கோல் அசை நிலை கடுப்ப நல் போர் ஓடா வல்வில் தூணி நாற்றி' என இயைக்க.

## பதவுரை :

கூடம் குத்தி—கூடமாக(க்கால்களை) நட்டு, கயிறு வாங்கு இருக்கை—கயிற்றை வலித்துக் கட்டின இருப்பிடத்தின்கண், கல் தோய்த்து உடுத்த-(துகிலைக்) காவிக் கல்லின் சாயத்தில் தோய்த்து உடுத்துக்கொண்ட, படிவம் பார்ப்பான்-நோன்பை உடைய (கையில் முக்கோலைப் பற்றின) அந்தணன், முக்கோல் அசைநிலை கடுப்ப—(அத்துகிலை) அம்முக்கோலிற் கட்டிவைத்த தன்மையை ஒக்க, நல்போர்—(சாதாரணமாகிய போரில் மாத்திரம் அன்றி) நல்ல போரிலும், ஓடாவல்வில்-தோலாமைக்குக் காரணம் ஆகிய வலிய வில்லை (நட்டு அதில்), தூணி நாற்றி-அம்பறாத்தூணிகளைக் கட்டித் தொங்கவிட்டு

## பொழிப்புரை :

கூடமாக (க்கால்களை) நட்டுக் கயிற்றை வலித்துக் கட்டின இருப்பிடத்தின்கண் (துகிலைக்) காவிக்கல்லின் சாயம் தோய்த்து உடுத்துக்கொண்ட நோன்பை உடைய (கையில் முக்கோலைப் பற்றின) அந்தணன், (அத்துகிலை அம்முக்கோலிலே) கட்டிவைத்த தன்மையை ஒக்கச்சாதாரணமாகிய போரில் மாத்திரம் அன்றி) நல்ல போரிலும் தோலாமைக்குக் காரணம் ஆகிய வலிய வில்லை (நட்டு அதில்) அம்பறுத்தூணிகளைக் கட்டித் தொங்க விட்டு

## விசேடவுரை :

'அசைநிலை' என்பது வினைத்தொகை; 'கட்டின தன்மை' என்பது அதன் பொருள். 'முக்கோல் அசை நிலை கடுப்ப' என்றதனால், அக்காலத்துப் பார்ப்பனத் துறவிகள் கையில் முக்கோலை (திரிதண்டத்தை) ஏந்தியிருப்பார்கள் என்பது தெரிகின்றது. இதனை,

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ"[1]

என்பதனால் அறிக.

கோவையில் வரும் 'கற்பொடு புணர்ந்த கவ்வை' என்பதன்கண் 'தலைவியைத் தேடிச்செல்லும் செவிலித்தாய், ஆற்றிடை முக்கோற்பகவரை வினவல்' என்றுள்ள துறையானும் இஃது அறியப்படும். ஈண்டுக் 'கல்' என்றது, காவிக்கல்லை. அஃது ஈண்டுக் காரணவாகுபெயராய் அதனால் உண்டாக்கப்படும் சாயத்தை உணர்த்தியது. "'துறவிகள்' என்பதை எதனாற் பெறுதும்?" எனின், 'கற்றோய்த்துடுத்த' என்றதனாற் பெறுதும் என்க.

---

1 கலித்தொகை, செ-9.

'செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்'[1]

என்க் கோதை நாய்ச்சியார் அருளியதையும் ஈண்டு நோக்குக.

நல்ல போராவது, கடுமையாகச் செய்யும் போராகும். அதனைக் கடுமையாகக் காயும் வெயிலை, 'நல்ல வெயில்' என்னும் உலகவழக்கான் அறிக. அன்றி, மிகுதியாகப் பெய்யும் மழையை 'நல்ல மழை' என்பர். ஆகலின், 'மிகுதியாகச் செய்யும் போர்' என்று கொள்ளுதலும் ஆம். ஈண்டு, 'நற்போரினும்' என்னும் உயர்வு சிறப்பு உம்மை தொக்கது, செய்யுள் விகாரம். 'கூடம் குத்தி' என்றதன் இடையில் 'ஆக' என்னும் சொல்லை வருவித்துரைக்க. மற்றும் வருவித்த சொற்கள் இசை எச்சம்.

பூந்தலைக் குந்தம் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் அரணம் அரணம் ஆக
வேறுபல் பெருப்படை நாப்பண்

## பதவுரை :

பூந்தலைக் குந்தம் குத்தி—அழகை விளக்கும் (சித்திரத்தொழிலைக் கொண்ட) தலையை உடைய எறிகோல்களையும் ஊன்றி, கிடுகு நிரைத்து—கேடகங்களை வரிசையாக அமைத்து, வாங்கு வில் (இவ்வாறு) சூழ்ந்த விற்படை ஆகிய, அரணம் அரணம் ஆக—வட்டமே காவலாக (அமைத்து அதற்குள் தங்கும்படி விடப்பட்ட), வேறு பல் பெரும்படை—(பேசுமொழி) வேற்றுபட்ட பெரிய சேனைக்கு, நாப்பண்—நடுவில்

---

[1] திருப்பாவை, பா. 16.

## பொழிப்புரை:

அழகை விளக்கும் (சித்திரத் தொழிலைக் கொண்ட) தலையை உடைய எறிகோல்களையும் ஊன்றி, கேடகங்களையும் வரிசையாக அமைத்து, (இவ்வாறு) சூழ்ந்த விற்படை ஆகிய வட்டமே காவலாக (அமைத்து, அதற்குள் தங்கும்படி விடப்பட்ட பேசுமொழிகள்) வேறுபட்ட பெரிய சேனைக்கு நடுவில்

## விசேடவுரை:

'பூ' என்னும் பலபொருள் ஒருசொல், ஈண்டு 'அழகு' என்னும் பொருள் தந்து நின்று, காரியவாகுபெயராய் அழகை விளக்கும் சித்திரத்தொழிலை உணர்த்திற்று. "அழகு பண்பு ஆதலின், அதனைப் பண்பாகுபெயர் என்னலாகாதோ?" எனின், பண்பி ஆகிய குந்தத்தின் தலையை உணர்த்தாமையின், அங்ஙனம் கூறலாகாது என்க. 'பூத்தலை' என்பதும், 'தலைக்குந்தம்' என்பதும் இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள். அரணம் என்பதற்குக் 'காவல்' என்பது பொருள். அரணம் என்னும் சொற்கள் இரண்டனுள் முன்னது, காரியவாகுபெயராய்க் காவலை உண்டாக்க வில்முதற் படையினால் இடப்படும் வட்டத்தை உணர்த்தியது; பின்னது, காவல் என்னும் பொருளதாகவே நின்றது. வருவித்த சொற்கள் இசையெச்சம்.

.......................................வேறோர்,
நெடுங்காழ்க் கண்டம் கோலி அகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யும் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்

*நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்*
*கையமை விளக்க நந்துதொறு மாட்ட*
50. *நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநாள்*

## அநுவயம் :

'வேறு ஓர் நெடுங்காழ்க்கண்டம் கோலி அகம் நேர்பு' என்பதனை 'வேறு ஓர் அகம் நேர்பு நெடுங்காழ்க் கண்டம் கோலி' எனவும், 'இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள் வாள்' என்பதனை 'இரவு பகல் செய்யும் ஒள் திண் பிடி வாள்' எனவும், 'விரவு வரி' என்பதனை 'வரி விரவு' எனவும் இயைக்க.

## பதவுரை:

வேறு ஓர் அகம் நேர்பு—வேறு ஓர் இடத்தை (அரசனுக்கு உரிய கோயிலாக யாவரும்) உடம்பட்டு, நெடுங் காழ்க்கண்டம் கோலி—நெடிய குத்துக்கோலுடன் (சேர்த்து அமைக்கப்பட்டுள்ள மதிலின்) திரைச் சீலைகளை வளைத்துக்கட்டி, குறுந்தொடி முன் கை—குறிய வளையை அணிந்த முன் கையையும், கூந்தல் அம் சிறு புறத்து—கூந்தல் (அசைந்துகொண்டிருக்கும்) அழகிய சிறிய முதுகையும் உடையவர்களும், இரவு பகல் செய்யும் ஒள் திண்பிடிவாள்—இரவைப் பகலாகச் செய்யும் ஒளியை உடைய வலியபிடியைக்கொண்ட வாளை, வரிவிரவு கச்சிற் பூண்ட மங்கையர்—பல நிறம் கலந்த கச்சிற்பூண்டவர்களுமாகிய மாதர்கள், நெய் உமிழ் சுரையர்—நெய்யை உமிழும் திரிக்குழாயை உடைய சிற்றுட்கள், நெடுந்திரி கொளீஇ—(எங்கும்) நெடிய திரியைக் கொளுத்தி, கை அமை விளக்கம்—ஒழுங்காக அமைத்த விளக்குகள், நந்துதொறும் மாட்ட—அவியுந்தோறும் (தம்முடைய

கையில் உள்ள பந்தத்தாற்) கொளுத்த, நெடுநா ஒள் மணி—நெடிய நாக்கினையும் ஒளியையும் உடைய மணியை, இழற்றிய நடுநாள்—அடித்து விட்ட நடு யாமத்தில்

## பொழிப்புரை :

வேறு ஓர் இடத்தை (அரசனுக்கு உரிய கோயிலாக யாவரும்) உடம்பட்டு, நெடிய குத்துக்கோலுடன் (சேர்த்து அமைக்கப்பட்டுள்ள மதிலின்) திரைச் சீலைகளை வளைத்துக்கட்டி, குறிய வளையை அணிந்த முன் கையையும் கூந்தல் (அசைந்துகொண்டிருக்கும்) அழகிய சிறிய முதுகையும் உடையவர்களும், இரவைப் பகல் செய்யும் ஒளியையும் வலிய பிடியையும் உடைய வாளைப் பல நிறம் கலந்த கச்சிற்பூண்டவர்களுமாகிய மாதர்கள், நெய்யை உமிழும் திரிக்குழாயை உடைய சிற்றுட்கள், (எங்கும்) நெடிய திரியைக்கொளுத்தி ஒழுங்காக அமைத்த விளக்குகள் அவியுந்தோறும் (தம்முடைய கையில் உள்ள பந்தத்தாற்) கொளுத்த, நெடிய நாக்கினையும் ஒளியையும் உடைய மணியை அடித்து விட்ட நடு யாமத்தில்

## விசேடவுரை:

கோயில் வேலைகள் நின்றால் மணி அடித்தல் இயல்பு. ஈண்டு, "இனி, 'யானை குதிரைகள் முதலிய துயில் கோடலின், அவற்றின் மணியோசை அடங்கிய நடுநாள்' என்றும் ஆம்," என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் விசேடவுரையிற் கூறியதனையும் நோக்குக.

'கண்டம்' என்பது 'துணி' என்பது போலக் கண்டிக்கப்பட்ட சீலையை உணர்த்தியது. இதில், 'கண்டி' என்பது பகுதி; 'இதில் ஈற்று இகரம் கெட்டது கடைக்குறை; இது, நடை என்பதன் பகுதி ஆகிய 'நட என்'

பதன் ஈற்று அகரம் கெட்டது போன்றது; 'அம்' என்பது செயப்படு பொருண்மை விகுதி.

அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக் கசைவந் தாங்குத்
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெருமூ தாளர் ஏமம் சூழ

## பதவுரை:

அதிரல் பூத்த—மோசி மல்லிகை பூத்த, ஆடுகொடிப் படாஅர்—அசையும் கொடியினை உடைய சிறுதூறுக்கள், சிதர்வரல்—நீர்த்துளியொடு வருதலை உடைய, அசை வளிக்கு அசைவந்தாங்கு—அசைந்த காற்றிற்கு அசைந் தாற்போல, துகில் முடித்து-தலைப்பாகை கட்டி, போர்த்த -(உடம்பைச் சட்டையால்) மறைத்த, தூங்கல் ஓங்குநடை —தூக்க மயக்கத்தையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் உடைய, பெருமூதாளர்—மிக்க முதுமையினை உடைய மெய்காப்பாளர், ஏமம் சூழ—காவலாகச் சூழ்ந்து திரிய

## பொழிப்புரை:

மோசிமல்லிகை பூத்த அசையும் கொடியினை உடைய சிறு தூறுக்கள், (நீர்த்) துளியொடு வருதலை உடைய அசைந்த காற்றிற்கு அசைந்தாற்போலத் தலைப்பாகை கட்டி, (உடம்பைச் சட்டையால்) மறைத்த தூக்க மயக்கத் தையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் கொண்ட மிக்க முதுமையினை உடைய மெய்காப்பாளர், காவலாகச் சூழ்ந்து திரிய

## விசேடவுரை:

'அதிரல் பூத்த கொடி, ஆடுகொடு' என இயைக்க.

மோசி மல்லிகை பூக்கப் பெற்று ஆடுவனவாகிய

கொடியை உடைய சிறு தூறுகள் காற்றால் அசைதல் உவமை.

தலைப்பாகை அணிந்து உடம்பிற்சட்டையிட்ட மெய் காப்பாளர், காவலாகச் சூழ்ந்து திரிதல் உபமேயம்.

மோசி மல்லிகை பூத்தகொடி, தலைப்பாகை அணிந்த தலைக்கு உவமை; சிறு தூறு மெய்காப்பாளருடைய உடலுக்கு உவமை.

கொடிகள் அசைதல், மெய்காப்பாளர் தலைகள் உறக்க மயக்கத்தினால் அசைவதற்கு உவமை. சிறு தூறுகளின் அசைவு, மெய்காப்பாளருடைய உடலின் அசைவுக்கு உவமை. உபமேயம் ஆகிய மெய்காப் பாளருக்குத் 'தூங்கல்' என்னும் அடை கொடுக்கப் பட்டிருத்தலை நோக்குக.

"'படாஅர் அசைவளிக்கு அசைவந்தாங்கு' என்றலே போதியது ஆக, அதற்குச் 'சிதர்வரல்' என்னும் அடை கொடுத்துப் 'படாஅர் சிதர்வரல் அசை வளிக்கு அசைவந்தாங்கு' என்று கூறியது என்னை?" எனின், நீர்த் திவலையோடு கூடிய காற்று, மெல்லென வீசும்; ஆதலின், அதனால் அசைக்கப்படும் சிறு தூறும் (படாரும்) மெல்லென அசையும். அது போல, மெய்காப் பாளர், அங்கு எவ்விடத்திலேனும், அரசனுக்குத் தீமை விளைப்பன எவையேனும் உளவோ என நன்கு கவனிக்கும் பொருட்டு மெல்லெனச் சுற்றித்திரியலாயினர் என்பதனை விளக்குதற்குக் கூறப்பட்டது. "சிறு தூறு அசை வதற்கு அசைவளி காரணம் ஆனாற்போல, மெய்காப் பாளர் சுற்றித்திரிதற்குக் காரணம் யாது?" எனின், அரசனைப் பாதுகாத்தல் வேண்டும் என்னும் எண்ணமே

அதற்குக் காரணம். 'சூழ்' என்பதற்கு 'ஏமம்' என்னும் அடை கொடுத்து, 'ஏமம்சூழ்' என்று கூறியதும் அதனை விளக்கவேயாம்.

ஈண்டு 'ஓங்கு நடை' என்பதற்கு 'உயர்ந்த ஒழுக்கம்' என்பது பொருள். இனிப் "பொருள் ஆகிய மெய்காப்பாளருக்கு 'ஓங்குநடை' என உவமைக்கு ஏலாத அடை கொடுத்தது யாதுக்கு?" எனின், மெய்காப்பாளர், தங்களுக்கு உறக்க மயக்கத்தினால் உளதாகிய வருத்தத்தைக் கருதாமல் அரசனைப் பாதுகாத்தலையே முதன்மையானதாகக் கருதிச் சூழ்வந்தமையாகிய அவர்களுடைய ஒழுக்கச் சிறப்பை உணர்த்துதற்குக் கொடுக்கப்பட்டது என்க.

"யானைகள் கவளம் உண்ணாமல் இருந்தமைக்குக் காரணமும் காவலிற்சென்ற கருத்தன்றோ? அவற்றிற்கு 'ஓங்குநடை' என்னும் அடை கொடுக்கப்படாமைக்குக் காரணம் என்னை?" எனின், அவை, பாகன் பயிற்றியபடி செய்வனவேயன்றித் தாமே 'தக்க இன்ன, தகாதன இன்ன' என்று கருதிச் செய்வன அல்ல; ஆதலின், அவற்றிற்கு அவ்வடை கொடுக்கப்பட்டிலது என்க.

'ஆடுகொடி, அசைவளி' என்பன வினைத் தொகைகள். 'படாஅர்' என்பது, செய்யுளிசை அளபெடை. 'சிதர்வரல்' என்பதன்கண் 'ஒடு' என்னும் மூன்றன் உருபு தொக்கது. 'அசைவந்தது' என்பது, ஈறுதொக்கு 'அசைவந்து' என நின்றது. இதில் 'அசைவா' என்பது பகுதி (முதனிலை). 'ஆங்கு' என்பது உவமவுருபு. துகில், துணி; அது, 'முடித்து' என்றதனால், காரணவாகு பெயராய்த் தலைப்பாகையை உணர்த்தி நின்றது. 'முடித்தல்' என்பது தலையிற் சூடுவனவற்றிற்கு உரியு

சிறப்பு வினை ஆகும். பெண்களுக்குப் புதிதாகப் பூப்பு உண்டான போதும், பெண்கள் முதற்கருவுற்றிருக்கும் போதும் செய்யப்படும் சடங்குகளுள் ஒன்றாகிய 'பூ முடித்தல்' என்பது, பெண்களின் தலையை மலர்களால் ஒப்பனை செய்தலையே உணர்த்துதலை நோக்குக. ஆதலின், முடித்தல் ஆகிய வினை தலைக்குச் சிறப்பாகிய வினை எனக் கொள்ளப்பட்டது என அறிக.

55. பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி,
'எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறுநீர்க் கன்னல் இனைத்தெ'ன் றிசைப்ப

## அநுவயம்:

'பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள், தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி' என்பதனை 'மாக்கள் பொழுது அளந்து அறியும் பொய்யாக் காண்கையர் தொழுது தோன்ற வாழ்த்தி' என இயைக்க.

## பதவுரை:

மாக்கள் பொழுது அளந்து அறியும்—(இம்மைக்கு உரிய நலத்தை எண்ணுதல் அன்றி மறுமைக்கு உரிய நலத்தை எண்ணி அறியும்) அறிவு இல்லாத மனிதர்களுடைய வாழ்நாட்களை (இவ்வளவின என்று) அளந்து அறியும், பொய்யாக் காண்கையர்—பொய்யாத காட்சியை (அறிவை) உடையவர்கள், தொழுது தோன்ற வாழ்த்தி—(அரசனை) வணங்கி விளங்க வாழ்த்தி, எறிநீர் வையகம்—(அலைகளை) வீசும் கடலாற் சூழப்பட்ட பூமியின்கண், வெலீஇய செல்வோய்—(பகைவர்களை) வெல்லுதற்குச் செல்லும் அரசரே, குறுநீர்க் கன்னல்—(உம்முடைய)

குறுகிய நீரை உடைய நாழிகை வட்டிலிற் (சென்ற நாழிகை), இனைத்து என்று இசைப்ப—இவ்வளவினது என்று சொல்லுதலால்

## பொழிப்புரை:

(இம்மைக்கு உரிய நலத்தை எண்ணுதல் அன்றி மறுமைக்கு உரிய நலத்தினை எண்ணி அறியும்) அறிவு இல்லாத மனிதர்களுடைய வாழ்நாட்களை (இவ்வளவின என்று) அளந்து அறியும் பொய்யாத காட்சியினை (அறிவினை) உடையவர்கள், (அரசனை) வணங்கி விளங்க வாழ்த்தி, "(அலைகளை) வீசும் கடலாற்சூழப்பட்ட பூமியின் கண் (பகைவர்களை) வெல்லச் செல்லும் அரசரே, உம்முடைய குறுகியநீரை உடைய நாழிகை வட்டிலிற் (சென்ற நாழிகை) இவ்வளவினது," என்று சொல்லுதலால்

## விசேடவுரை:

'இம்மைக்கு உரிய நலத்தை எண்ணுதல் அன்றி மறுமைக்கு உரிய நலத்தை எண்ணி அறியும் அறிவு இல்லாத மனிதர்கள்' என்பார், '**மாக்கள்**' என்றார். பொழுது அளந்து அறிகின்றவர்கள் சோதிடர்கள். இவர்கள் மக்கள் வாழ்நாட்களைக் கணித்து அறிபவர்கள் ஆதலால், '**கணிகள்**' என்றும் கூறப்படுவார்கள். மறுமைக்கு உரிய நலத்தை எண்ணி அறியும் அறிவை உடையவர்களும், இன்றியமையாத போது சோதிடரைத் தேடுவார்கள்; அவ்வறிவு இல்லாத மனிதர்கள் எப்போதும் சோதிடர்களைத் தேடித்திரிவார்கள்; ஆதலால், அவர்களிடத்திற் சோதிடர்களுக்கு எப்பொழுதும் வேலை உண்டு. ஆதலின், 'மாக்கள் பொழுது அளந்து அறியும்' என்றார். 'அறியும்' என்னும் செய்யும் என் முற்று, ஈண்டு முக்காலத்திற்கும் பொதுவாய்நின்றது. 'எறிநீர்'

என்பதன்கண் 'எறி' என்னும் அடையால், 'நீர்' என்பது கடலை உணர்த்தியது. இது, காரணவாகுபெயர். ஈண்டு 'அலைகள்' என்னும் செயப்படுபொருள் வருவித்து உரைக்கப்பட்டது. ஈண்டுக் குறுநீர்' என்பது 'குறுமை ஆகிய நீரை உடையது' என்றாய், நாழிகை வட்டிலை உணர்த்தியது; இது, பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகிய காரணப்பெயர். 'வலீஇய' என்பது 'செய்யிய' என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; இதன்கண் அளபெடை சொல்லிசை அளபெடை.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்
திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழையர் ஆக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது

## அநுவயம்:

'உடம்பின் உரைக்கும் உரையா நாவின்' என்பதனை 'நாவின் உரையா, உடம்பின் உரைக்கும்' என இயைக்க.

## பதவுரை:

மத்திகை வளைஇய—(குதிரையை அடிக்கும்) சம்மட்டி வளைந்துகொண்டிருப்பதும், மறிந்து வீங்கு செறிவு உடை—(அச்சம்மட்டி மறையும்படி) ஓரம் தாழ்ந்து பெருகி

இருக்கும் செறிவை உடையதும் ஆகிய உடையினையும், மெய்ப்பை புக்க-சட்டை இட்ட, வெருவரும் தோற்றத்து-அச்சத்தைத் தரும் தோற்றத்தினையும், வலி புணர் யாக்கை-(இயல்பாகிய) வன்மையைக் கொண்ட உடம்பை யும் உடைய, வன்கண் யவனர்—அஞ்சாமையைக் கொண்டவர்களாகிய சோனகர்களால், புலித்தொடர் விட்ட—புலிச் சங்கிலிகள் விடப்பட்டதும், புனைமாண் நல் இல்—அலங்கரிக்கபபட்டதும் மேன்மையை உடையதும் ஆகிய நல்ல இல்லத்தின்கண், திருமணி—அழகிய மாணிக்கமாகிய, விளக்கம காட்டி—விளக்கை (ஒளி விட) அமைத்து, திண் ஞாண்—வலிய கயிற்றாலே, எழினி வாங்கிய—திரையை வளைத்துக் கட்டின, ஈர் அறைப் பள்ளியுள்—(அறைக்குள் அறையாய் உள்ள) இரண்டு அறைகளுள் உள் அறையில் இடப்பட்ட படுக்கையில் (சென்று), நாவின் உரையா—(ஊமைகள் ஆதலின், தங்கள் எண்ணத்தை) வாயினாற் சொல்லாமல், உடம்பின் உரைக்கும்—கை முகம் முதலிய (உடம்பின்) உறுப்புக் களால் தெரிவிக்கும், படம் புகும் மிலேச்சர்—சட்டை இட்ட மிலேச்சர்கள், உழையர் ஆக—(படுக்கையின்) பக்கத்திற் (சுற்றித்) திரிய, மண்டு அமர்—மிக்குச் செய்கின்ற போரிற்கொண்ட, நசையொடு—விருப்பத் தினால், கண்படை பெருஅது—கண் உறக்கம் கொள்ளாமல்.

## பொழிப்புரை:

(குதிரையை அடிக்கும்) சம்மட்டி வளைந்துகொண் டிருப்பதும், (அச்சம்மட்டி மறையும்படி) ஓரம் தாழ்ந்து பெருகி இருக்கும் செறிவை உடையதும் ஆகிய உடை யினையும், சட்டை இட்ட அச்சத்தைத் 'தரும தோற்றத் தினையும், (இயல்பாகிய) வன்மையைக் கொண்ட உடம்

பிணையும் உடைய அஞ்சாமையைக் கொண்டவர்களாகிய சோனகர்களால் புலிச்சங்கிலிகள் விடப்பட்டதும் அலங்கரிக்கப்பட்டதும் மேன்மையை உடையதுமாகிய நல்ல இல்லத்தின்கண், அழகிய மாணிக்கம் ஆகிய விளக்கை (ஒளிவிட) அமைத்து, வலியகயிற்றாலே திரையை வளைத்துக் கட்டின (அறைக்குள் அறையாய் உள்ள) இரண்டு அறைகளுள், உள் அறையுள் இடப்பட்ட படுக்கையில் (சென்று, ஊமைகள் ஆதலின், தங்கள் எண்ணத்தை) வாயினால் சொல்லாமல், கை முகம் முதலிய (உடம்பின்) உறுப்புக்களால் தெரிவிக்கும் சட்டை இட்ட மிலேச்சர்கள் (படுக்கையின்) பக்கத்திற் (சுற்றித்) திரிய, மிக்குச் செய்கின்ற போரிற்கொண்ட விருப்பத்தினால் உறக்கம் கொள்ளாமல்

23-ஆம் அடியிலிருந்து 66-ஆம் அடி வரையிலும் உள்ள 43 அடிகளாற் பாசறையின் அமைப்பைக் கூறினார். இந்நூலின் மொத்த அடிகள் 103 ஆகும். அவற்றுள், பாசறை அமைப்பை 43 அடிகளாற்கூறி, மீதி உள்ள 60 அடிகளால் மற்றவற்றைக் கூறினர். "பாசறை அமைப்பை இவ்வளவு விரிவாகக் கூறியது ஏன்?" எனின், 'பகைவர் மேற்செல்வோர் எங்குப் பாசறை அமைப்பர்? எவ்வாறு அமைப்பர்? அரசன் எங்கு இருப்பன்?' என்பன முதலியவற்றைப் பிற்காலத்தவர்கள் நன்கு அறிதற்காக அங்ஙனம் விரிவாகக் கூறினர் என்க.

எடுத்தெறி எஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
70. பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச் [துமிபு
சேறுவாய்த் தொழிந்தோர் உள்ளியும் தோல்

வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து
உண்ணா துயங்கு மாசிந் தித்தும்
ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசிருந்து பணிக்கு முரசுமுழங்கு பாசறை
இன்துயில் வதியுநற் காணாள் துயருழந்து

## அநுவயம்:

'வேழத்துப் பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமிய' என்பதனை 'வேழத்துப் பரூஉக்கை பாம்பு பதைப்பு அன்ன துமிய' எனவும், 'தோல் துமிபு வைந்நுனைப் பகழி மூழ்கலின்' என்பதனை 'வைந்நுனைப் பகழி தோல் துமிபு மூழ்கலின்' எனவும், 'ஒருகை முடியொடு கடகம் சேர்த்தி' என்பதனை 'ஒருகை கடகம் முடியொடு சேர்த்தி' எனவும் இயைக்க.

## பதவுரை :

எடுத்து எறி எஃகம் பாய்தலின்—ஓச்சி வெட்டுகின்ற வாள் அழுந்துதலாலே, புண்கூர்ந்து—புண்கள் மிகுந்து, பிடிக்கணம் மறந்த—பெண்யானைக் கூட்டங்களை மறந்த, வேழம் (உள்ளியும)—களிறுகளை எண்ணியும், வேழத்துப் பரூஉக்கை— (பகைவர்களுடைய) யானைகளின் பருமையாகிய துதிக்கைகள், பாம்பு பதைபபு அன்ன துமிய—பாம்புகள் பதைத்தல் போன்ற பதைப்பை உடையவாகி அற்று விழும்படி, தேபபாய் கண்ணி—தேன்பரவும்(வஞ்சி) மாலைக்கு, நல் வலம் திருத்தி—நன்றாகிய வெற்றியைத் திருத்தும் உற[illegible]ண்டாகி, சோறு வாய்த்து—செஞ்

சோற்றுக்கடன் கழித்து, ஒழிந்தோர் உள்ளியும்—இறந்த வீரர்களை எண்ணியும், வைந்நுனைப்பகழி—கூரிய முனையை உடைய அம்புகள், தோல் துமிபு மூழ்கலின்—தோலாற் செய்யப்பட்ட கலனை அறுத்துக்கொண்டு(தம்முடைய உடலில் வந்து) அழுந்துதலால், செவிசாய்த்து உண்ணாது உயங்கும்—காதுகளைச் சாய்த்துக்கொண்டு (புல்) உண்ணாமல் வருந்தும், மா சிந்தித்தும்—குதிரைகளை எண்ணியும், ஒருகை பளளி ஒற்றி—ஒருகையைப படுக்கையின் மேலே வைத்து, ஒருகை கடகம் முடியொடு சேர்த்தி—மற்றொரு கையில் அணிந்துள்ள கடகத்தை முடியொடு சேர வைத்து.[1] நெடிது நினைந்து—('இப்படைகள் இவ்வளவு நொந்திருக்கின்றனவே! இவை நாளை எவ்வாறு போர் புரியும்!' என்று) நெடிதாக எண்ணி,[2] பகைவர்ச் சுட்டிய படைகொள் நோனவிரல்—பகைவரைக் கருதிக்கொண்டு (வாள் முதலிய) படைகளை ஏந்திய வலிமை ஆகிய விரல்களை உடையதாகிய கையால், நகைதாழ் கண்ணி—(தனக்கு எப்போதும்)ஒளி மிகுதற்குக் காரணமாகிய வஞ்சிமாலைக்கு, நல்வலம் திருத்தி—நன்மை ஆகிய வெற்றியைச் செம்மை உற உண்டாக்கி, அரசு இருந்து பனிக்கும்—(பகை) அரசர்கள் (தங்கள் இடம்) இருந்தும் நடுங்குதற்குக் காரணம் ஆனதும், முரசு முழங்கு—வெற்றி முரசுகள் ஒலிககப் பெறறதும ஆகிய,பாசறை இன் துயில் வதியுநன்—பாசறையின்கண் இனிய துயிலோடு தங்கியிருக்கும தலைவனை, காணாள் துயர் உழந்து—(எழிலி பெருமபெயல் பொழிந்த சிறுபுன்மாலையில் அவன பாசறையில் தங்கியிருந்தலின தனபால் தங்கியிருக்கக்) காணாதவளாய்த் துயரால் வருந்தி

---

[1] இதற்குக் 'கையிலே தலையை வைத்து' என்பது கருத்து.

[2] இதற்கு 'மிகவும் எண்ணி' என்பது கருத்து.

## பொழிப்புரை:

ஓச்சி வெட்டுகின்ற வாள் அழுந்துதலாலே, புண்கள் மிகுந்து பெண் யானைக் கூட்டங்களை மறந்த களிறுகளை எண்ணியும், பகைவர்கள் படையில் உள்ள யானைக ளுடைய பருமை ஆகிய துதிக்கைகள், பாம்புகள் பதைப் பது போன்ற பதைப்பை உடையனவாகி அற்று விழும்படி (வெட்டித்) தேன் பரவும் (வஞ்சி) மாலைக்கு நன்மை ஆகிய வெற்றியைத் திருத்தம் உற உண்டாக்கிச் செஞ்சோற்றுக் கடன் கழிக்க இறந்த வீரர்களை எண்ணி யும், கூரிய முனையை உடைய அம்புகள், தோலாற் செய்யப்பட்ட கலனையை அறுத்துக்கொண்டு, (தம் முடைய உடலில் வந்து) அழுந்துதலால், காதுகளைச் சாய்த்துக்கொண்டு (புல்) உண்ணாமல் வருந்தும் குதிரை களை எண்ணியும், ஒரு கையைப் படுக்கையின் மேலே வைத்து, மற்றொரு கையில் அணிந்துள்ள கடகத்தை முடியோடு சேர வைத்து, ('இப்படைகள் இவ்வளவு நொந்திருக்கின்றனவே! இவை நாளை எவ்வாறு போர் புரியும்!' என்று) நெடிதாக எண்ணிப் பகைவர்களைக் கருதிக்கொண்ட (வாள் முதலிய) படைகளை ஏந்திய வலிமை ஆகிய விரல்களை உடையதாகிய (தன்னுடைய) கையால் (தனக்கு எப்பொழுதும்) ஒளி மிகுதற்குக் காரணம் ஆகிய வஞ்சி மாலைக்கு நன்மை ஆகிய வெற்றி யைச் செம்மை உற உண்டாக்கிப் பகை அரசர்கள் தங்கள் இடம் இருந்தும் நடுங்குதற்குக் காரணம் ஆனதும், வெற்றி முரசுகள் ஒலிக்கப் பெற்றதும் ஆகிய பாசறை யின்கண் இனிய துயிலொடு தங்கியிருக்கும் தலைவனை (எழிலி, பெரும்பெயல் பொழிந்த சிறு புன்மாலையில் அவன் பாசறையில் தங்கியிருத்தலின் தன்பால் தங்கி இருக்கக்) காணாதவளாய்த் துயரால் வருந்தி.

## விசேடவுரை:

'காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போல் உண்கண் புலம்புமுத் துறைப்ப'

(அடி 22, 23) என்றதன் பின் தலைவன் இருப்பைப் பாசறையிற் காட்டுதலின், 'தலைவன் வினைமேற் சென்று விட்டனன்' என்பதனை உய்த்துணர வைத்தனர். அங்ஙனம் தலைவன் வினைமேற்சென்றுவிட்டனன் என்பதை. (81-ஆம் அடியில்) 'நெஞ்சாற்றுப் படுத்த புலம்பொடு' என்பதனாலும் குறிப்பித்தார்.

'ஆய்மகள், நடுங்குசுவல் அசைத்த கையள்'

(அடி 13, 14) என்றதனால், கூதிர்ப்பாசறை என்பதையும்,

'வேழத்துப் பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோர் உள்ளியும்'

(அடி 69-72) என்றதனாலும்,

'நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி'

(அடி 77) என்றதனாலும் பெரிதும் வெற்றி உண்டாயிற்று என்பதையும்,

'மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது'

(அடி 67) என்றதனால், மற்றுஞ் சிறிது போர் உளது என்பதையும்,

'எடுத்தெறி எஃகம் பாய்தலின், புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம் (உள்ளியும்)'

(அடி 68, 69) எனவும்,

'வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமியத்

தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோர் உளளியும்,'

(அடி 69-72) எனவும்,

'தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலின், செவிசாய்த்து,
உண்ணாது உயங்கு மாசிந் தித்தும்'

(அடி 72-73) எனவும் கூறியவற்றான் தலைவன் வினைமேற்சென்றதையும், அதுகாறும் போர் நடந்திருத்தலையும், அதன் திறத்தையும் உய்த்துணர வைத்தனர்.

'படைகொள் நோன்விரல்'

(அடி 77) என்பது 'வலிமை ஆகிய விரல்களை உடைய கை' என்றதலின், பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை ஆகிய காரணப்பெயராய் ஈண்டுக் கையை உணர்த்தி நின்றது.

"'படைகொள் கை' என்னாது, 'நோன்விரல்' என்று கூறி, அதனால் 'கை' என்பதைக் கொள்ள வைத்தது என்னை?" எனின், படைகளைப் பற்றுதல் எய்தல் முதலிய வினைகளைச் செய்தற்கண் விரல்கள் இன்றிக் கை பயன்படாது. விரல்களே வினை புரிதற்கண் முதன்மை உற்று நிற்பன என்பதனை உணர்த்தற்கு அங்ஙனம் கொள்ள வைத்தனர் என்றறிக. 67-ஆம் அடியாகிய 'மண்டமர் நசையொடு கண்படை பெறாது' என்பது முதல் 80-ஆம் அடியில் 'இன்துயில்'வதியுநன்' என்பதன்காறும் தலைவன் அன்று இரவு பாசறைக்கண் இருந்த நிலையைக் கூறினர்.

அந்நிலையாவது, பாசறைக்கண் அமைந்த காதல் உடையனாகி, அதினின்று திரிவு இல்லாதிருத்தல்.

அதினின்று திரிவு இல்லாதிருத்தலாவது, தலைவி யின்மீது காதலைச் செலுத்தாமல், போரின்மீதே காதல் உடையவனாகி இருத்தல். அதனைக்,

"கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்"[1]

என்னும் சூத்திரத்தானும், ஆசிரியர் நச்சினார்க்கினியர் அதன் விசேட உரையில், "தலைவிமேற் காதலின்றிப் போரின்மேற் காதல் சேறலின், 'ஒன்றி' என்றார்," என்று கூறியதானும் அறிக.

'பரூஉ' என்பது, இன்னிசை அளபெடை. 'அன்ன' என்பது, 'அன்னவாகி' என்றுதலின், குறிப்பு முற்றெச் சம். 'தோல்' என்பது, ஈண்டுக் காரணவாகு பெயராய்க் கலனையை (சேணத்தை) உணர்த்தியது. 'பனிக்கும் பாசறை' என்பது, 'பனிப்பதற்குக் காரணமாகிய பாசறை' என்றுதலின், இதில் உள்ள 'பனிக்கும்' என்பது, காரியப்பொருளதாகிய எதிர்காலப் பெய ரெச்சம். 'இருந்தும்' என்பதன் உயர்வு சிறப்பு உம்மை ஈண்டுத் தொக்கு நின்றது; இது, செய்யுள் விகாரம். 'வதியுநன்' என்பது குறிப்பு வினையாலணையும் பெயர்.

நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஒடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கிஇழை நெகிழ்ந்து
85. பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறை சொரிதரு மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின.

[1] தொல். பொருள். புறத்திணை இயல், சூ. 22.

## பதவுரை:

நெஞ்சு ஆற்றுப் படுத்த—(தலைவன்) தன் மனத்தைத் (அது போகின்ற) வழியிற்செலுத்திய (காரணத்தால்) உண்டானதும், நிறை தபு புலம்பொடு—தன் நிறையைக் கெடுத்ததும் ஆகிய தனிமையால், நீடு நினைந்து தேற்றியும்—(தலைவனும் பெருமுது பெண்டிரும் கூறியவற்றைத் தன் மனத்திற்கொண்டு, 'தலைவர் இவ்வாறு பிரியின் அல்லாமல் இவ்வரசு இயல் நிகழாது.' என்பதனை நன்கு நினைந்து (தன் மனத்தைத்) தெளிவித்தும், ஓடு வளை திருத்தியும்—கழலுகின்ற வளையைக் கழலாமற் செறித்தும், மையல் கொண்டும்—மயக்கம் கொண்டும், ஒய்யென உயிர்த்தும்—விரையப் பெருமூச்சு விட்டும், ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி—அம்பு தைத்த மயிலைப் போல நடுங்கி, இழை நெகிழ்ந்து—அணிகலங்கள் நெகிழப் பெற்று, பாவை விளக்கில்—பொற்பாவை ஏந்தி நின்ற அகலில், பரூஉச்சுடர் அழல—பெரிய விளக்கு (நின்று) எரிய, இடம் சிறந்து உயரிய—(தம் இடம் முற்றும் பொன்னாலும் மணியாலும்) சிறப்பு உற்று உயர்ந்தனவாகிய, எழுநிலை மாடத்து—ஏழு நிலைகளை உடைய மாடத்தின் கண், முடங்கிறை சொரிதரு—கூடல்வாயாற் சொரியப்படும், மாத்திரள் அருவி—பெருமையை உடைய திரண்ட அருவிகளினுடைய, இன்பல் இமிழ் இசை—இனிய பலவாகிய ஒலிக்கின்ற ஒலிகளால், ஓர்ப்பனள் கிடந்தோள்—(இது, தலைவர் கூறிய பருவம் ஆதலின், தாம் கூறியபடி பொய்யாமல் வருவர்,' என்று) எண்ணிக் கொண்டு கிடந்தவளுடைய, அம்செவி நிறைய ஆலின—அகஞ்செவி நிரம்பும்படி ஆரவாரித்தன.

## பொழிப்புரை:

(தலைவன் தன் மனத்தை அது போகின்ற வழியிற் செலுத்திய (காரணத்தால்) உண்டானதும், தன்னுடைய

நிறையைக் கெடுத்ததும் ஆகிய தனிமையால், (தலைவனும் பெருமுது பெண்டிரும் கூறியவற்றைத்) தன்னுடைய நெஞ்சிற்கொண்டு, ('தலைவர் இவ்வாறு பிரிந்தால் அல்லாமல் இவ்வரசியல் நிகழாது,' என்பதனை) நன்கு நினைந்து (தன் மனத்தைத்) தெளிவித்தும், கழலுகின்ற வளையைக் கழலாமற் செறித்தும், மயக்கம் கொண்டும், விரையப் பெருமூச்சு விட்டும், அம்பு தைத்த மயில் போல நடுங்கி, அணிகலங்கள் நெகிழப்பெற்று, பொற்பாவை ஏந்தி நின்ற அகலிற் பெரிய விளக்கு (நின்று) எரிய(த் தம்முடைய இடம் முற்றும் பொன்னாலும் மணியாலும்) சிறப்பு உற்று உயர்ந்தனவாகிய ஏழு நிலைகளை உடைய மாடத்தின்கண், கூடல்வாயாற் சொரியப்படும் பெருமையை உடைய திரண்ட அருவிகளினுடைய இனிய பல வாகிய ஒலிக்கின்ற ஒலிகளால், ('இது, தலைவர் கூறிய பருவம் ஆதலின், தாம் கூறியபடி பொய்யாமல் வருவர்,' என்று) எண்ணிக்கொண்டு கிடந்தவளுடைய அகஞ்செவி நிரம்பும்படி ஆரவாரித்தன.

## விசேடவுரை:

இது, 103-ஆம் அடியில் உள்ள 'நெடுந்தேர் பூண்டமா' என்பதனோடு இயையும். 'பூண்ட மா ஆலின,' என்க.

ஈண்டுத் தலைவி மனையின்கண் ஆற்றியிருந்த நிலையைக் கூறினர்.

"பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து"

என்பதனால் அவர்களுடைய செல்வச் சிறப்புக் கூறப்பட்டது.

தலைவி, தலைவனுடைய சொற்படி ஆற்றியிருந்தனள்; ஆயினும், அங்ஙனம் ஆற்றியிருத்தற்கண் தலைவிக்கு உண்டான துன்ப நிலையை ' ஒடுவளை திருத்தியும், மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும், ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து " என்பனவற்றால் கூறினர். இது, கண்டு கேட்டோர் பிறரை நோக்கிக் கூறியது என்க.

' ஆலின ' என்றதனால், 'தலைவனுடைய வருகையை உணர்த்துவனவாகிய எவையோ ஆலின,' எனக் கேட்டோர்க்குத் தோன்றுவதன்றி, இன்ன ஆலின என்பது நன்கு விளங்காமையின், கேட்டோர்க்கு எவை ஆலின என்று அறிதலின் வேட்கை தோன்றும் அன்றோ? அவ் வேட்கையைத் தோன்றச் செய்து பின் அதனைக் கூறி முடித்த ஆசிரியர் திறம், பெரிதும் போற்றுதற்கு உரியது ஆகும்.

வென்றுபிறர்

90. வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி உயரி

## அநுவயம் :

'பிறர் வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந்தானையொடு விசயம்' என்பதனைப் 'பிறர் வேண்டுபுலம் கவர்ந்த விசயம் ஈண்டு பெருந்தானையொடு' என இயைக்க.

## பதவுரை :

வென்று—(பகைவர் படைகளை வெட்டி) வென்று, பிறர் வேண்டுபுலம் கவர்ந்த விசயம்—பகை அரசர்களால் (எக்காலமும்) விரும்பப்படும் நிலங்களைக் கைக்கொண்ட

வெற்றியால், ஈண்டு பெருந்தானையொடு—திரளுகின்ற பெரும்படைகளுடன், வெல்கொடி உயரி—(எக்காலமும்) வென்று எடுக்கும் கொடியை (உயர) எடுத்து

## பொழிப்புரை :

(பகைவர் படைகளை வெட்டி) வென்று, பகை அரசர்களால் (எக்காலமும்) விரும்பப்படும் நிலங்களைக் கைக்கொண்ட வெற்றியால் திரளுகின்ற பெரும்படைகளுடன் (எக்காலமும்) வென்று எடுக்கும் கொடியை (உயர) எடுத்து

## விசேடவுரை :

எஞ்சி நின்ற போரைச் செய்து பகைவர்களை முற்றும் வென்றமை ஈண்டுக் கூறப்பட்டது. 'விசயம் ஈண்டு' என்பது, 'விசயத்தால் ஈண்டு' என்றாதலின், மூன்றன் தொகை. 'வெற்றி பெற்றமையை அறிந்து படை வீரர்கள் திரண்டு ஒருங்கு கூடினார்கள்,' என்பார், 'வென்று, பிறர் வேண்டுபுலம் கவர்ந்த விசயம் ஈண்டு பெருந்தானை' என்றார்.

……………………………வலனேர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப அயிர
செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப் பிரலையொடு மடமான் உகள
எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்

முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துணைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே

## அநுவயம்:

'வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின் திரிமருப் பிரலையொடு மடமான் உகள எதிர் செல் வெண்மழை பொழியும் திங்களில்' என்பதை 'வானம் வாய்த்த எதிர் செல் வெள் மழை பொழியும் திங்களில் வாங்குகதிர் வரகின் திரிமருப்பு இரலையொடு மடமான் உகள' என்று இயைக்க.

## பதவுரை:

வலன் ஏர்பு—வெற்றி தோன்றுதலால், வயிரும் வளையும் ஆர்ப்ப—கொம்பும் சங்கும் முழங்க, அயிர செறி இலைக் காயா—நுண்மணலிடத்து உளனவாகிய நெருங்கின இலைகளை உடைய காயா, அஞ்சனம் மலர—மையைப்போல மலர, முறி இணர்க் கொன்றை—தளிரையும் கொத்தினையும் உடைய கொன்றை மரம், நல் பொன் கால—சிறந்த பொன் போன்ற மலர்களைச் சொரிய, கோடல் குவிமுகை—வெண்காந்தளின குவிந்த அரும்பு, அம்கை அவிழ—அகங்கை போல இதழ் விரிய, தோடு ஆர் தோன்றி—திரட்சி அமைந்த செங்காந்தள், குருதி பூப்ப—உதிரம் போலப் பூப்ப, கானம் நந்திய—காடு தழைத்த, செந்நிலப் பெருவழி—சிவந்த நிலத்தின் பெருவழியில், வானம் வாய்த்த—மழை வேண்டப் பெய்த, எதிர் செல் வெள் மழை பொழியும் திங்களில்—எதிர் காலத்துக்குப் பொழியச் செல்கின்ற வெள்ளிய மேகம் இறு -துவலையைப் பொழியும் முன்பனி தொடங்கும்

மாதத்திலே, வாங்கு கதிர் வரகின்—வளைகின்ற கதிரை உடைய வரகிடத்து, திரிமருப்பு இரலையொடு—முறுக்குண்ட கொம்பினை உடைய புல்வாய்க்கலையோடு, மடமான் உகள—மடப்பத்தை உடைய மான் துள்ள, முதிர்காய் வள்ளியங்காடு பிறக்கு ஒழிய—(தன் பருவம் வந்தால்) முதிரும் காயை உடைய வள்ளியங்காடு பின்னாக, துனைபரி துரக்கும் செலவினர்—(விரைந்து செல்லும் குதிரைகளை அவை தாமே செல்கின்ற விரைவோடு அமையாது, தலைவியை விரைந்து சென்று காணுதல் வேண்டும் என்னும் அவாவினால் மேலும்) கடிதாகச் செலுத்தும் செலவினை உடையவராய் வந்த தலைவருடைய, வினைவிளங்கு—(தாம் எடுத்துக்கொண்ட) வினை (எக்காலத்தும்) விளக்கம் உறுதற்குக் காரணம் ஆன, நெடுந்தேர் பூண்ட மா—நெடிய தேரைப் பூண்ட குதிரைகள்

## பொழிப்புரை:

வெற்றி தோன்றுதலால் கொம்பும் சங்கும் முழங்க, நுண்மணலிடத்து உள்ளனவாகிய நெருங்கின இலைகளை உடைய காயா மையைப்போல மலர, தளிரையும் கொத்தினையும் உடைய கொன்றைமரம் சிறந்த பொன்போன்ற மலர்களைச் சொரிய, வெண்காந்தளின் குவிந்த அரும்பு அகங்கைபோல இதழ் விரிய, திரட்சி அமைந்த செங்காந்தள் உதிரம் போலப் பூப்ப, காடு தழைத்த சிவந்த நிலத்தின் பெருவழியில் மழை வேண்டப் பெய்த எதிர்காலத்துக்குப் பெய்யச் செல்கின்ற மழை சிறு துவலையைப் பொழியும் முன்பனி தொடங்கும் மாதத்திலே, வளைகின்ற கதிரை உடைய வரகிடத்து முறுக்குண்ட கொம்பினை உடைய புல்வாய்க் கலையோடு மடப்பத்தை உடையமான் துள்ளத் (தன் பருவம் வந்தால்) முதிருங் காயை உடைய

வள்ளியங்காடு பின்னாக, விரைந்து செல்லும் குதிரைகளை (அவை தாமே செல்கின்ற விரைவோடு அமையாது தலைவியை விரைந்து சென்று காணுதல் வேண்டும் என்னும் அவாவினால் மேலும்) கடிதாகச் செலுத்தும் செலவினை உடையவராய் வந்த தலைவருடைய (தாம் எடுத்துக்கொண்ட) வினை (எக்காலத்தும்) விளக்கம் உறுதற்குக் காரணம் ஆகிய நெடிய தேரைப்பூண்ட குதிரைகள்

## விசேடவுரை :

'குதிரைகள் ஆலின,' என்க. 'வினைவிளங்கு' என்னும் விசேடத்தை 'மா' என்பதனோடு இயைக்க.

காயா அஞ்சனம் போல மலர்ந்ததும், கொன்றை பொன் போன்ற மலர்களைச் சொரிந்ததும், கோடலின் அரும்புகள் அகங்கைபோல இதழ் அவிழ்ந்ததும், தோன்றி உதிரம் போலப் பூத்ததும், திரிமருப்பு இரலையோடு மடமான் உகளாநின்றதும், தலைவற்குத் தலைவியின் பால் விரைந்து செல்லுதல் வேண்டும் என்னும் வேட்கையை விளைப்பன ஆயின. ஆதலான்,

"வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான." [1]

என்றபடி இயல்பாக விரைந்து செல்லும் குதிரைகளைத் தலைவன் மேனமேலும் விரைவாகச் செல்லுமபடி செலுத்தினன் என்பார்,

"துணைபரி துரக்கும் செலவினர்"

என்றார்.

---

[1] தொல், பொருள், கற்பியல், சூ. 53.

அங்ஙனம் விரைந்து வந்த தலைவன் தலைவியின்பாற் சென்று அவளை மகிழ்வித்தனன் என்பதை விதந்து கூறாமல், உய்த்துணர வைத்தனர். ஈண்டுக் கோதை நாய்ச்சியார், திருப்பாவையின்கண், ஆய்ப்பாடியில் ஆயர் குல நங்கையர்கள், மார்கழித்திங்களின் முன்னை நாள் நோன்பு நோற்க முடிவு செய்து, மார்கழித் திங்களின் முதல் நாள் விடியலுக்கு முன் துயில் உணர்ந்து எழுந்தவர்கள், அங்ஙனம் எழாமலிருக்கும் மற்றை நங்கையர்களை எழுப்பி அழைத்துக்கொண்டு சென்று, நந்தகோபருடைய திருமாளிகையை அடைந்து, கண்ணனை எழுப்பிச் சீரிய சிங்காதனத்தின்கண் வீற்றிருக்கச் செய்து, தாங்கள் கருதிய பயனை அளித்தருள வேண்டும் என்று கூறினார்கள் என்பதைக் கூறி, அந்நங்கையர்கள் கண்ணன் அருளால் அந்நோன்பை முடித்துத் தாங்கள் கருதிய பயனை எய்தினார்கள் என்பவற்றை விதந்து கூறாது உய்த்துணர வைத்திருத்தல் நோக்குதற்கு உரியதாகும். இவ்வாசிரியர் இப்பாட்டில் இங்ஙனம் பலவற்றை உய்த்துணரும்படி வைத்திருக்கின்றனர். அவை,

"நவில்தொறும் நூனயம் போலும்" [1]

என்று திருவள்ளுவ தேவர் அருளியபடி ஆழ்ந்து நோக்குந்தோறும் இன்பம் பயப்பனவாய் இருக்கின்றன. இப்பாட்டிற்கூறிய ஒழுக்கம், முல்லைத்திணைக்கு உரிய 'இருத்தல்' என்னும் ஒழுக்கமாகும்.

இப்பாட்டின்கண் 'காடுபிறக்கொழிய' (அடி-101.) என்றதனால் நிலமாகிய முதற்பொருளும், 'எழிலி, பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை' என்றதனாற் பெரும்

---

1 திருக்குறள், பொருள், அங்கவியல், செய். 3.

பொழுதும் சிறு பொழுதும் ஆகிய காலமாகிய முதற் பொருளும் கூறப்பட்டன.

'மாஅல் போல' (அடி-3.) என்றதனுலே தெய்வமும், 'ஆய்மகள்' (அடி-13) என்றும், 'கொடுங்கோற் கோவலர்' (அடி-15.) என்றும் கூறியவற்றுன் மக்களும்; 'செறி இலைக் காயா அஞ்சனமலர' (அடி-93.) என்றும், 'முறி இணர்க் கொன்றை நன்பொன் கால' (அடி-94) என்றும் கூறிய வற்றுல் மரமும்; 'தோட்டார் தோன்றி' (அடி-96.) என்றதனுற் பூவும்; 'திரிமருப்பிரலையொடு மடமான் உகள' (அடி-99) என்றதனுல் விலங்கும் ஆகிய கருப்பொருள்கள் கூறப்பட்டன.

ஆசிரியர் நப்பூதனுர் 103 அடிகளை உடைய இந்நேரிசை ஆசிரியப்பாவில் பல வகைச் சொல் நோக்கும், பல வகைப் பொருள் நோக்கும் அமைய இந்நூலை யாத்திருக்கும் திறன் கற்பார்க்குச் சிறந்த மகிழ்ச்சியை விளைப்பதாய் இருக்கின்றது.

### நேரிசை வெண்பா

**வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாணெடுங்கண்**
**சென்றடைந்த நோக்கம் இனிப்பெறுவ—தென்றுகொல்**
**கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுதிர்த்துக்**
**குன்றெடுத்து நின்ற நிலை ?**

முல்லைப்பாட்டின் உரை

முற்றிற்று.

# அருஞ்சொற்பொருள் அகராதி

(எண்—அடி எண்)

அகம் நேர்பு-கோயிலை உடம்பட்டு, 44.

அகல்-அகன்ற, 24

அங்கை அவிழ-அகங்கைக் போல இதழ் விரிய, 95.

அசைத்த-கட்டின, 14.

அசைநிலை கடுப்ப-கட்டி வைத்த தன்மையைப் போல, 38.

அசை வந்தாங்கு-அசைந்தாற்போல, 52.

அசை வளி-அசைந்த காற்று, 52.

அஞ்சனம் மலர-மைபோல மலர, 93.

அஞ்செவி-அகஞ்செவி (உட்செவி), 89.

அதிரல்-மோசி மல்லிகை, 51.

அம் சிறு புறம்-அழகிய சிறிய முதுகு, 45.

அரசு-அரசர்கள், 79.

அரணமாக-காவலாக, 42.

அருங்கடி-அரிய காவல், 7.

அருப்பம்-அரண், 26.

அயிர-நுண் மணலில் உள்ள, 92.

அயில் நுனை-கூர்மையாகிய முனை, 34.

அலமரல்-சுழலல், 13.

ஆய் மகள்-ஆயர் குலப் பெண், 13.

ஆர்த்தல்-ஆரவாரித்தல், 92.

ஆர்ப்ப-ஆரவாரம்செய்ய, 8

ஆலின-ஆரவாரித்தன, 89

இசைப்ப-சொல்ல, 58.

இமிழ்-முழங்கும், 4, 88.

இமிழ் இசை-முழங்கும் ஒலி, 88.

இருக்கை-இருப்பிடம், 40.

இழை நெகிழ்ந்து-அணிகள் கழலப்பெற்று, 84.

இன்குளகு-இனிய தழை யுணவு, 33.

இன் துயில் வதியுநன்-இனிய உறக்கத்தோடு தங்கியுள்ள தலைவன், 80.

இன் பல்-இனிய பலவாகிய, 88.

இன்னே-இப்பொழுதே, 16.

இனவண்டு-கூட்டமாகிய வண்டுகள், 8.

இணைத்து என்று-(நாழிகை) இவ்வளவினது என்று, 58.

ஈண்டு பெருந்தானை-திரள்கின்ற பெரிய சேனை, 90.

உகள-துள்ள, 99.

உடம்பின் உரைக்கும்-கைமுகம் முதலியவற்றால் தெரிவிக்கும், 65.

உடுத்த - உடுத்துக் கொண்ட, 37.

உண்கண் - மை தீட்டப் பெற்ற கண்கள், 23.

உய்த்தர - செலுத்துதலைச் செய்ய (செலுத்த), 15.

உயங்கும்-வருந்தும், 74.

உயரி-உயர எடுத்து, 91.

உயரிய-உயர்ந்த, 86.

உவலை-தழை, 29.

உழையர் ஆக-(படுக்கையின்) பக்கத்தில் (சுற்றித்) திரிய, 66.

உறுதுயர்-உண்டான துன்பம், 13.

உறைப்ப-துளிக்க, 7, 23.

எஃகம்-வாள், 68.

எடுத்து எறி-ஓங்கி வெட்டுகின்ற, 68.

எதிர்செல்-எதிர் காலத்துக்குப் பெய்யச் செல்கின்ற, 100.

எருக்கி-வெட்டி, 25.

எவ்வம்-துன்பம், 21.

எழிலி-மேகம், 5.

எழுநிலை மாடம்-ஏழு நிலைகளையுடைய மாளிகை, 86

எழினி வாங்கிய-திரையை வளைத்துக் கட்டிய, 64.

எறிநீர்-(அலை) வீசுகின்ற கடல், 57.

என்போள்-என்று சொல்பவள், 16.

என-என்று சொல்ல, 21

ஏ உறு-அம்பு தைக்கப் பெற்ற, 84.

ஏமம் உற-காவலாய் இருக்கும்படி, 27.

ஏமம்-காவல், 54.

ஒய்யென உயிர்த்தும்-விரைவாகப் பெருமூச்சு விட்டும், 83.

ஒரு கை-மற்றொரு கையில், 75.

ஒழிந்தோர் - இறந்த வீரர், 72.

ஒழுகிய - ஒழுங்குபட அமைந்த, 29.

ஒள் மணி - ஒளியையுடைய மணி, 50.

ஒள் வாள்-ஒளியையுடைய வாள், 46,

ஓங்குநிலை-வளரும் தன்மை, 32.

ஓடா வல்வில்-தோலாமைக் குக் காரணமாகிய வலிய வில், 39.

ஓடு வளை திருத்தியும் - கழலும் வளையை(க் கழலாமற்) செறித்தும், 82.

ஓர்ப்பனள் கிடந்தோள்-எண்ணிக்கொண்டு கிடந்தவள், 88.

கடகம் முடியொடு சேர்த்தி-கடகத்தை முடியோடு சேர வைத்து, 76.

கண்டம் கோலி-(திரைச்) சீலையை வலித்துக் கட்டி, 44.

கண்ணி-(வஞ்சி) மாலை, 71.

கண்படை பெறாஅது-உறக்கம் கொள்ளாமல், 59, 67.

கதிர்-(நெற்) கதிர்கள், 32.

கயிறு வாங்கு-கயிற்றை வலித்துக் கட்டின, 40.

கல் தோய்த்து-(துகிலைக்) காவிக் கல்லின் சாயத்தில் தோய்த்து, 37.

கல்லா இளைஞர் - (கற்க வேண்டிய நூற்களைக்) கல்லாத இளைஞர், 36.

கலுழ் சிறந்து-கலக்கம் மிகுந்து, 22.

கவர்ந்து-கைப்பற்றிக் கொண்டு, 19.

கவலை-பல பிரிவாய் உள்ள வழி(ஈண்டு நாற்சந்தி,)30.

கவளம் கைப்ப - கவளத்தைத் தின்னும்படி குத்த, 36.

கவுள கன்னத்தையுடையவை, 31.

கவை முட்கருவி-பல பிரிவாகிய முட்களையுடைய குத்துக்கோல், 35.

களை-போக்கு, 21.

காட்ட - காட்டின்கண் உள்ளவை, 26.

காட்டல்-தெரிவித்தல், 22.

காட்டி-(ஒளி விட) அமைத்து, 63.

காண்கையர் - அறிவுடையவர், 56.

காணாள்-காணாதவளாய், 80; கருதாதவளாய், 22.

காயா-காயாஞ்செடியின் மலர்கள், 93.

காவல் நின்ற - காவலாய் நின்ற, 30.

கான் யாறு-காட்டாறு, 24.

கானம் நந்திய - காடு தழைத்த, 97.

கிடுகு நிரைத்து-கேடகங்களை வரிசையாக அமைத்து, 41.

குந்தம் குத்தி - எறிகோல் களை ஊன்றி, 41.
குருதி பூப்ப-உதிரம்போலப் பூக்க, 96.
குவிமுகை-குவிந்த அரும்புகள், 95.
குறுந்தொடி-குறியவளை, 45
குறுநீர்க் கன்னல்-குறுகிய நீரையுடைய நாழிகை வட்டில், 58.
கூடம் குத்தி - கூடமாக(க் கால்களை) நட்டு, 40.
கேட்டனம்-கேட்டோம், 17.
கை-அதிக்கை, 34.
கை அமை விளக்கம்-ஒழுங்காக அமைக்கப்பட்ட விளக்குகள், 49.
கை தொழுது - கைகூப்பி வணங்கி, 10.
கைய-கையில் உள்ளன, 14.
கொடுங்கோல் - வளைந்த கொம்பு, 15.
கொடுஞ்செலவு - விரைந்த செலவு, 5.
கொண்டென - கொண்டனவாக, 34.
கொளீஇ-கொளுத்தி, 48.
கோடல் - வெண்காந்தள் மலர், 95.
கோடு-மாலை, 5.
கோவலர்-இடையர், 15.
சிதர்-நீர்த்துளி, 52
சிந்தித்தும்-எண்ணியும், 74.
சிறுதாம்பு-சிறிய கயிறு, 12.
சுரையர் - திரிக்குழாயை உடைய சிற்றுட்கள், 48.
சுவல்-தோள், 14.
சூழ-சூழ்ந்து திரிய, 54.
செந்நிலம்-சிவந்த நிலம், 97.
செறி இலை-நெருங்கிய இலைகள், 93.
செறி உடை - செறிந்த உடை, 59.
சேண் - (தூர) இடம், 25.
சோறு வாய்த்து-சோற்றுக் கடன் கழித்து, 72.
தட-பெரிய, 2.
தலை-இடம், 1.
தாயர்-தாய்ப் பசுக்கள், 16.
திங்கள்-மாதம், 100.
திண்ஞாண் - வலிய கயிறு, 63.
திண்பிடி - வலிய கைப்பிடி, 46.
திரள் அருவி - திரண்ட அருவி நீர், 87.
திரி மருப்பு இரலை-முறுக்குண்ட கொமபையுடைய கலைமான், 99.

திருமணி விளக்கம்-அழகிய மாணிக்கமாகிய விளக்கு, 63.

திறை-கப்பம், 19.

துகில் முடித்து - தலைப் பாகை கட்டி, 53.

துமிய-அற்று விழும்படி, 70.

துயர் உழந்து - துயரால் வருந்தி, 80.

தூக்கும் செலவினர்-(விரையச்) செலுத்தும் செலவினையுடைய தலைவர், 102.

துணைபரி - விரைந்து செல்லும் குதிரைகள், 102.

தூங்கல் ஓங்கு நடை-தூக்கமும் உயர்ந்த ஒழுக்கமும், 53.

தூணி நாற்றி - அம்பறுத் தூணியை (க்கட்டித்) தொங்க விட்டு, 39.

தூய்-தூவி, 10.

தெவ்வர்-பகைவர், 18.

தேம்படு-மதநீர் பாய்கின்ற, 31.

தேம்பாய்-தேன் பரவும், 71.

தேற்றியும் - (தன் மனத்தைத்)தெளிவித்தும், 82.

தொடுத்த-கட்டின, 12.

தோடு ஆர் தோன்றி-திரட்சி நிறைந்த செங்காந்தள் மலர், 96.

தோல் துமிபு - தோலாற் செய்யப்பட்ட கலனையை (ச்சேணத்தை) அறுத்துக்கொண்டு, 72.

தோற்றம்-காட்சி, 60.

தோன்ற-விளங்க, 56.

நகை தாழ் கண்ணி - ஒளி மிகுதற்குக் காரணமாகிய (வஞ்சி) மாலை, 78.

நந்துதொறும் - அவியுந் தொறும், 49.

நல் பொன் கால - சிறந்த பொன் போன்ற மலர் களைச் சொரிய, 94.

நல் வலம் திருத்தி-நன்றாகிய வெற்றியைத் திருத்தமுற உண்டாக்கி, 71.

நற்போர்-நல்ல போரில், 38.

நறுவீ-நல்ல மலர், 9.

நன்மொழி - நன்மையாகிய சொல், 17.

நன்னர்-நன்மை, 17.

நனை-அக்லம், 1.

நாப்பண்-நடு, 43.

நாவின் உரையா - வாயாற் சொல்லாமல், 65.

நாழி-ஒரு படி, 9.

நாறு-மணம் வீசும், 25.

நிழத்திய நடுநாள்-அடித்து விட்ட நடு யாமம், 50.

நிறைதபு - நிறையைக் கெடுக்கும், 81.
நீடு நினைந்து - நெடிதாக எண்ணி (நன்கு ஆராய்ந்து), 82.
நெஞ்சு ஆற்றுப்படுத்த- மனத்தை (அது போகின்ற) வழியிற் செலுத்திய, 81.
நெடிது நினைந்து-நெடிதாக எண்ணி, 76.
நெடுங்காழ்-நெடிய குத்துக் கோல், 44.
நெடுந்தேர்-பெரியதேர்,103
நெடு நா-நெடிய நாக்கு, 50.
நெய் உமிழ்-நெய்யை உமிழும், 48.
நேமி-சக்கரம், 1.
நோன் விரல்-வலிமையாகிய விரல்களையுடைய கைகள், 77.
பகைவர்ச் சுட்டிய படைகொள் - பகைவர்களைக் கருதிக் கொண்ட படைகளை ஏந்திய, 77
பசலை-வருத்தம, 12.
படம் புகும் மிலேச்சர்-சட்டையிட்ட மிலேச்சர், 66.
பட்டாஅர்-சிறு தூறுகள்,51
படிவப் பார்ப்பான்-நோன்பையுடைய அந்தணன், 37.
பரந்த-பரவிய, 28.
பருவரல்-துடுமாற்றம், 21.
பருஉக்கை - பருமையாகிய துதிக்கை, 70.
பருஉச்சுடர் அழல-பெரிய விளக்கு (நிலை பெற்று) எரிய, 85.
பள்ளி-படுக்கை, 64.
பள்ளி ஒற்றி-படுக்கையின் மேல் வைத்து, 75,
பனி-குளிர்ச்சி, 4.
பணிக்கும் முரசு-நடுங்குதற்குக் காரணமாகிய (வெற்றி) முரசுகள், 79.
பாசறை-பாடி வீடு, 79.
பாடி-பாசறை(போர்க்களத்தில் வீரர்கள் தங்குதற்கு அமைந்த கூடாரம),24,28
பாடு-ஒலி, 4.
பாம்பு பதைப்பு அன்ன-பாம்புகள் பதைத்தல் போன்ற பதைப்பை உடையனவாய், 70.
பாவை விளக்கு - (பொன்னாற்செய்த) பிரதிமை (ஏந்தி நின்ற) விளக்கு,85
பிடிக்கணம்-பெண் யானைக் கூட்டம், 69.
பிறக்கு ஒழிய-பின்னாக, 101,
பிறர்-பகையரசர், 89,

புண் கூர்ந்து-புண்கள் மிகுந்து, 68.
புணரி படு நீர் - அலைகள் பொருந்திய கடல், 28.
புல் மாலை-அற்பநேரமாகிய மாலைக் காலம், 6.
புலம்பு-தனிமை, 23, 81.
புலித்தொடர் விட்ட-புலிச் சங்கிலிகள் விடப்பட்ட, 62.
புழை - (கதவிட்டுப் புகும்) சிறு வழி, 26.
புறவு-காடு, 24.
புனை - அலங்கரிக்கப்பட்ட, 62.
பூ-செந்தாமரை மலர், 23.
பூண்டமா - கட்டின குதிரைகள், 103.
பூந்தலை-அழகை விளக்கும் தொழிலையுடைய தலை, 41.
பெரும்பெயல்-பெரிய மழை, 6.
பெருமுது பெண்டிர்-பெரிய அறிவினையுடைய முதிய மாதர்கள், 11.
பெருமூதாளர் - மிக்க முதுமையையுடைய மெய்காப்பாளர், 54.
பைம்புதல் - பசிய் புதர்கள், 25.
போகி-போய், 7.
போர்த்த - (உடம்பைச் சட்டையால்) மறைத்த, 53.
மஞ்ஞையின் நடுங்கி - மயிலைப்போல நடுங்கி, 84.
மடமான் - இளம்பெண் மான், 99.
மண்டு அமர்-மிக்குச் செய்கின்ற போர், 67.
மத்திகை வளைஇய - (குதிரையை அடிக்கும்) சம்மட்டி வளைந்துள்ள, 59.
மருங்கு-பக்கம், 7.
மறிந்து வீங்கு - (ஓரம்) தாழ்ந்து பெருகியிருக்கும், 59.
மா-குதிரை, 74; திருமகள், 2.
மாக்கள் - அறிவில்லாதவர்கள், 55.
மாட்ட-கொளுத்த, 49.
மாட்டி-அழித்து, 26.
மாண் நல் இல்-மேன்மையையுடைய நல்ல வீடு, 62.
மாயோய் - மாமை நிறம் உடையவளே, 21.
மால்-மகாவிஷ்ணு, 3.
மிடைந்து - நெருங்க இட்டு, 32.
முடங்கிறை-கூடல் வாய், 87.

முத்து - முத்துப்போன்ற கண்ணீர்த்துளி, 23.

முல்லை அலரி-முல்லை மலர், 9, 10.

முள் இடு புரிசை - முட்களால் அமைக்கப்பட்ட மதில், 27.

முறி இணர்க் கொன்றை-தளிரையும் பூங்கொத்தையும் உடைய கொன்றை மரம், 94.

முனை-போர்க்களம், 19.

மூதூர் - பழைமையாகிய ஊர், 7.

மூழ்கலின்-அழுந்துதலால், 73.

மெய்ப்பை-சட்டை, 60.

மையல்-மயக்கம், 83.

யவனர்-சோனகர், 61.

யாத்த-கட்டின, 32.

யாழ் இசை-யாழின் இசை போன்ற ஒலி, 8.

வடமொழி பயிற்றி - வட சொற்களைச் சொல்லி, 35.

வயல்-கழனி, 33.

வயிரும் வளையும் - ஊது கொம்பும் சங்கும், 92.

வரி விரவு - (பல) நிறங்கள் கலந்த, 47.

வலம்புரி - வலம்புரி சங்கு (வலப்பக்கம் சுழிந்துள்ள சங்கு), 2.

வலன் ஏர்பு - வெற்றி தோன்றுதலால், 91; வலமாக எழுந்து, 4.

வலி புணர் யாக்கை - வன்மையைக் கொண்ட உடம்பு, 61.

வள்ளியம் காடு - வள்ளிக் காடு, 101.

வளை இ-வளைத்து, 27.

வன்கண்-அஞ்சாமை, 61.

வாங்கு-சூழ்ந்த, 42; வளையும், 98.

வாங்கு கதிர் வரகு-வளையும் கதிர்களையுடைய வரகு, 98.

வாய்ப்புள் - வாயினின்று உண்டான சகுனச் சொல், 18.

வாய்வது உண்மை, 20.

வானம் வாய்த்த-(வேண்டிய அளவு) மழை பெய்த, 98.

விசய வெல்கொடி - வெற்றியால் எடுக்கும் வெற்றிக் கொடி, 91.

விரிச்சி-நற்சொல், 11.

வில் அரணம் - விற்படையாகிய பாதுகாப்பு, 42.

விளை விளங்கு - (மேற்கொண்ட தொடங்கிய) காரியம் விளங்கும், *103.*

வெருவரும் - அச்சந்தரும், *60.*

வெலீஇய-வெல்ல, *57.*

வெள் மழை - வெள்ளிய மேகம், *100.*

வேடு-வேடர்கள், *26.*

வேண்டு புலம் - விரும்பப் படும் நிலங்கள், *90.*

வேழம் - ஆண் யானைகள், *69.*

வேறு பல் பெரும்படை-வெவ்வேறாகிய பல மொழிகளைப் பேசும் பெரிய சேனை, *43.*

வைந்நுனைப் பகழி-கூர்மையாகிய முனையையுடைய அம்புகள், *73.*

வையகம்-பூமி, *57.*

புத்தகம் கிடைக்குமிடம் :

**N. R.** சடகோப முதலியார்,
39, வேளாளர் தெரு, புரசைப்பாக்கம்,
சென்னை-7.

முத்தமிழ் நூற்பதிப்புக் கழகம்,
27, நெல்லுக்காரத் தெரு,
பெரிய காஞ்சீபுரம்.